
உ

# அருள் ஒளி



## அமரர் சைவத்திரு.கா.சிவபாலன்

## சிறப்பிதழ்

143

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்


தெல்லிப்பழை, இலங்கை.

புரட்டாதி - ஐப்பசி (2019)

# அமரர் சைவத்திரு.கா.சிவபாலன் அவர்களின் நினைவுகள்










உ

# அருள் ஒளி

## (மாதாந்த சஞ்சிகை)



ஆசிரியர்
கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள்

புரட்டாதி – ஐப்பசி மாத மலர்
2019

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை

பதிவு இல : ISSN 2362 - 0587
ISBN 978 - 955 - 23 - 0019 - 3

e-mail : thurkaiammantemple@gmail.com
face book : tellidurga@gmail.com

# இலங்கைத் தமிழர்களுக்கான நிரந்தர தீர்வினை இந்தியா பெற்றுத்தர வேண்டும்

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சனை இதுவரை சரியான முறையில் தீர்க்கப்படவில்லை. இந்திய அரசு மாகாணசபை முறையை அறிமுகம் செய்ததுடன், வடக்கு - கிழக்கு இணைந்த வகையிலான மாகாணசபை ஆட்சியை உருவாக்கிக் கொடுத்தது. எனினும், மாகாணசபையின் நெறிமுறைகள் தமிழர் பிரச்சனையை தீர்த்ததாக இல்லை. இலங்கை அரசு வடக்கு - கிழக்கு மாகாணத்தை கூறுபோட்டு பிரித்துவிட்டது. எதுவிதமான தீர்வும் இன்றி இலங்கைத் தமிழர்கள் தொடர் அவலத்துக்குள் ஆட்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இலங்கைத் தமிழர்கள் தற்போது நிர்க்கதியாக உள்ளனர். சர்வதேச நாடுகள் மற்றும் இலங்கைத் தமிழர் விடயத்தில் முன்பு தலையிட்டவர்கள் யாவரும் போருக்குப் பின் ஓய்ந்துவிட்டனர். எம் இனம் சார்ந்த அரசியல்வாதிகளிடையே பூரணமான ஒற்றுமை இல்லை. நாளுக்கு நாள் புதிய கட்சிகள் தோற்றம் பெறுவதும், தங்களுக்குள் மோதிக்கொள்வதும் வழக்கமாகிவிட்டது.

இந்திய அரசு இலங்கையின் இனப்பிரச்சனையை தீர்ப்பதில் துரிதமாக செயற்படவேண்டும். இலங்கைத் தமிழர் பிரச்சனையில் நீண்டகாலம் தொடர்புபட்ட இந்தியத் திருநாடு சரியான முறையில் அதனைத் தீர்த்து வைப்பதற்கு உதவவேண்டும். இந்தியப் பிரதமர் கௌரவ நரேந்திரமோடி அவர்களின் காலத்தில் இப்பிரச்சனை தீர்க்கப்படாதுவிட்டால், இலங்கைத் தமிழர்களின் நிலை மேலும் பரிதாபத்திற்குரியதாக அமைந்துவிடும்.

ஆயுதப் போர்கள் மௌனித்த நிலையில் வடக்கு கிழக்கில் அவசர குடியேற்றத் திட்டங்களும், புதிய பௌத்த மதக் கோயில்களும் உருவாக்கப்பட்டு வருவது வெளிப்படையான உண்மை. இந்திய அரசாங்கம் வடக்கில் துணைத் தூதுவராலயத்தை திறந்து செயற்பட்டு வருவது ஓரளவு ஆறுதல் தருகிறது. எனினும், வடக்கு கிழக்கில் நடைபெறும் திட்டமிட்ட இலங்கை அரசின் விவகாரங்களில் இந்தியா மௌனமாக இருப்பது உகந்ததல்ல. உடனடியாக, இலங்கைத் தமிழ் மக்களது நீண்டகாலப் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு பெற்றுத் தருவதற்கு இந்திய அரசு உதவுவது காலத்தின் கட்டாயமாகும்.

இலங்கை அபிவிருத்தியில் இந்தியா கணிசமான பங்களிப்புச் செய்து வருகிறது. பலாலியிலுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் உருவாவதற்கு இந்திய அரசு முக்கிய பங்கு வகித்துள்ளது. என்றோ ஒருநாள் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராமர்பாலம் செப்பனிடப்பட்டு பயன்பாடு தொடங்கும் போது இருநாடுகளுக்குமான உறவு அதிகரிக்கும் என்பது யதார்த்தமான உண்மை.

இலங்கையும் இந்தியாவும் போக்குவரத்து வசதிகளை மேற்கொள்வது போல, கண்ணீரோடு வாழும் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சனைகளை உரிய வகையில் தீர்த்துவைத்து, நீதி, நியாயம் கிடைப்பதற்கு இரு அரசுகளும் இணைந்து முன்வருவது அவசியமாகும்.

---

# கேதார கௌரி விரதம்

கேதாரகௌரி விரதம் சிவபெருமானை நினைத்து அனுஷ்டிக்கப்படும் விரதமாகும். கேதாரகௌரி விரதம் மேற்கொண்ட பார்வதிதேவி சிவபெருமானின் இடப்பாகத்தைப் பெற்றார். இதனால் இறைவன் அர்த்தநாரீஸ்வரர் ஆனார் என்று சொல்லப்படுகிறது. இதனால் இவ்விரதத்திற்கு கேதாரகௌரி விரதம் என்ற பெயர் உண்டாயிற்று.

இந்த விரதம் ஒவ்வொரு வருடமும் புரட்டாதி மாத வளர்பிறை தசமி திதியில் ஆரம்பமாகி, ஐப்பசி மாத தீபாவளி அமாவாசை வரையான இருபத்தொரு நாட்கள் கடைப்பிடிக்கப்படுகிறது. இவ்வருட கேதாரகௌரி விரதம் அக்டோபர் 8ஆம் திகதியன்று ஆரம்பமாகி, 27ஆம் திகதியன்று நிறைவு பெறுகிறது.

திருமணமாகிய பெண்கள் தங்களது மாங்கல்யம் தொடர்ந்தும் மங்களகரமாக இருக்க வேண்டும் என்பதற்காகவும், திருமணமாகாத கன்னிப் பெண்கள் நல்ல மாங்கல்ய வாழ்வை வேண்டியும் இவ்விரதத்தை அனுஷ்டிப்பர்.

பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் மங்களகரமான வாழ்க்கையை வேண்டி, குடும்பத்தில் ஒற்றுமை, வாழ்வில் வளம், நற்புத்திரப் பேறு என்பன கிடைப்பதுடன், நல்ல எண்ணங்களும் ஈடேற வேண்டும் என்பதற்காக கேதார கௌரி விரதத்தை அனுஷ்டித்து வருகிறார்கள்.

# அமரர் சைவத்திரு.கா.சிவபாலன் அவர்களின் வாழ்வும் வளமும்

ஆறு.திருமுருகன்

மனித வாழ்வு மகத்தானது. பல ஆயிரம் மனிதர்களை மனிதர்கள் சந்திக்கிறார்கள். இன்ப துன்பங்களைப் பகிர்ந்து மனிதர்கள் மனிதர்களுக்கு அன்பு செய்து வாழ்வதே மகிழ்ச்சி. பிறவிப்பயன் நாம் செய்த புண்ணியங்கள். மனிதன் தன்வாழ்வை தான் தீரமானிப்பதற்கு இறைவன் வாய்ப்பைக் கொடுக்கிறான். எனினும் பிறப்பையும் இறப்பையும் இறைவன் தானே தீர்மானிக்கிறான். இதனால் இனியவர்கள், எமக்குத் தேவையானவர்களை நாம் இழக்கும்போது அதிர்ந்து போய்விடுகிறோம். இது என்ன உலகம்? என ஆச்சரியப்படுகிறோம். சமீபத்தில் எம்மில் பலரை அதிர்ச்சிக்கு ஆட்படுத்திய சம்பவமே சைவத்திரு. சா. சிவபாலன் அவர்களின் மறைவு என்றால் மிகையாகாது. தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் சுமா்ர் நாற்பது ஆண்டுகளாக ஆன்மீகப் பணியாற்றிய இச்சைவ சீலரின் பிரிவு பலரையும் ஆச்சரியத்துக்குட்படுத்தியுள்ளது.

தென்மராட்சியில் சைவப்பாரம்பரியம் மிக்க குடும்பத்தில் காசிநாதர் தம்பதிகளுக்கு மைந்தனாக **26.03.1952** இல் பிறந்தவர். இவர், தங்கள் பரம்பரைப் பாடசாலையாகிய மட்டுவில் சந்திர மௌலீஸ்வர வித்தியாலயத்தில் தனது ஆரம்பக்கல்வியைக் கற்றுப் பின் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தனது இடைநிலைக் கல்வியைத் தொடர்ந்தவர். சிறுவயதிலேயே ஆன்மீக நாட்டமுள்ள இவர், குடும்பப் பாரம்பரியத்துக்கு அமைய சிவதீட்சை பெற்று ஆசாரசீலராக தங்கள் குலதெய்வமாகிய சந்திரமௌலீசர் பெருமானையும், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மனையும் இடைவிடாது வழிபட்டு வந்தார். ஆத்மஞான சிந்தனைகளால் கவரப்பட்ட இவர் தமிழுக்குப் பெருமை சேர்த்த மட்டுவில் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ஐயா அவர்களை நாடி அவரைத் தன் மானசீக் குருவாகக் கொண்டு அவரிடம் தேடிச் சென்று உபதேசம் பெற்றார். பண்டிதர் அவர்களை பண்டிதரப்பா என அழைத்து அவரின் நிழலை நாடி திருநெல்வேலிக்கு மட்டுவிலிலிருந்து வந்து போவார். குருந்தரமர நிழலில் மணிவாசகப் பெருமானுக்கு சிவப்பரம்பொருள் வாசக தீட்சை வழங்கியதுபோல பண்டிதமணி ஐயாவிடம் திரு.கா.சிவபாலன் அவர்கள் வாசக தீட்சை பெற்றார். அன்று முதல் தவக்கோலமாக வாழ்ந்தார். ஞானிகள் மகான்களின் நூல்களைத் தேடிக் கற்றார். விரதங்களில் சிறந்த மௌனவிரதத்தை ஞாயிறு தினங்களில் கடைப்பிடிக்கத் தொடங்கினார். புலனடக்க விரதங்களில் மிகக்கடினமான மௌனவிரதத்தை தன் வாழ்நாள் முழுவதும் காப்பாற்றினார்.

*1978* ஆம் ஆண்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் லிகிதர் பணிக்கு பொருத்தமானவரை தேர்ந்தெடுப்பதற்கு நேர்முகப்பரீட்சை நடைபெற்றது. பலர் வருகை தந்தார்களாம். அவர்களில் ஒருவராக அமரர் சிவபாலன் அவர்கள் பண்டிதமணியின் நற்சான்றுடன் வருகை தந்ததாக அன்னை சிவத்தமிழ்ச் செல்வி

அம்மா அவர்கள் பல தடவை குறிப்பிட்டுள்ளார்கள். அச்சான்றுக் கடிதத்தில் "கோவில் வேலைக்கு இவரைப் போல் ஒருவரை எடுப்பது சிரமம்" எனக் குறிப்பிட்டு இருந்தார். நேர்முகத் தேர்வில் திரு.சிவபாலன் அவர்கள் பின்வரும் வேண்டுதலைச் சமர்ப்பித்தாராம். ஞாயிறு மௌன விரதம், பங்குனித் திங்களில் மட்டுவில் அம்மனிடம் போய் வர விடுமுறை தரவேண்டும். மற்றும்படி கோவிலில் தங்கிப் பணி செய்வேன் என அவர் குறிப்பிட்டிருந்தார். அதனை ஏற்ற நிர்வாக சபையினர் அவரை பதவியில் நியமித்தனர். அதிகாலை நான்கு மணிக்கு நித்திரையால் விழித்து நீராடி அனுட்டானம் பார்த்து திருக்கோவில் பணியில் ஈடுபட்டவர், இறப்பதற்கு **26** நாட்களுக்கு முன் நோயால் பாதிப்பு ஏற்பட்ட நாள்வரை நியமம் தவறாது காலை மாலை வழிபாட்டை மேற்கொண்டார்.

அன்னை சிவத்தமிழ்ச்செல்வி அம்மையாரின் நம்பிக்கைக்கு பாத்திரமான அமரர் அவர்கள் ஆலய அலுவலகக் கடமைகளை நன்றாகப் பேணினார்கள். முழுநேரத்தையும் ஆலயக் கடமைக்கு அர்ப்பணித்துப் பணியாற்றினார். சமூகத்தின் பெருமதிப்பு அவருக்குக் கிடைத்தது. நள்ளிரவு நேரம் துப்பாக்கி முனையில் கொள்ளையர்கள் கோவில் ஆபரணங்களை கொள்ளையடிக்க வந்தபோது பல கஷ்டங்களை அனுபவித்து முகம் கொடுத்தார். கொள்ளையடிக்கப்பட்ட ஆபரணங்கள் திரும்பி வந்த அதிசயத்தை அவர் சொல்லும் அழகு தனித்துவமானது.

இடப்பெயர்வுகளால் பல மக்கள் கோவிலில் அடைக்கலமாக அகதி நிலையில் தங்கிய வேளையில் அம்மாவுடன் நின்று துணை செய்தார். அன்னையின் பிறந்தநாள் அறநிதியச் சபையில் இவரையும் ஒரு உறுப்பினராக சபை நியமித்து கௌரவித்தது. **1995** கால இடப்பெயர்வுச் சூழலில் மருதனார்மடத்தில் இராமநாதன் கல்லூரியின் விடுதிச்சாலையில் அம்மாவும் மகளிர் இல்லமும் தங்கிய வேளை இராமநாதன் கல்லூரியில் இயங்கிய ஆலய அலுவலகத்திலேயே அமரர் தங்கியிருந்தார். இடப்பெயர்வு அவலத்தின்போது அன்னையுடனும் மகளிர் இல்லப் பிள்ளைகளுடனும் கைதடி உஷன் கந்தசாமி கோவில் போன்ற இடங்களில் தங்கியிருந்து அரிய பணியாற்றினார். **1998**இல் மகாகும்பாபிஷேகத்தோடு மீளவும் தெல்லிப்பழை வந்து கோவில் சூழலிலேயே அமரர் அவர்கள் தன் அந்திமக் காலம் வரை தங்கியிருந்து பணி செய்தார்.

அன்னை சிவத்தமிழ் செல்வி அவர்கள் **2008** இல் மறைந்தபோது மிகவும் கவலையுற்றார். அன்னாருடன் **1981** முதல் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. **1989** இல் சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் யான் பணியாற்றிய காலத்தில் இவரோடு அதிகம் பழகும் சந்தர்ப்பம் கிட்டியது. ஆலய நிர்வாக சபையில் அங்கம் வகித்த காலத்தில் **1995** முதல் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிட்டியது. என்மீது அவர் மிகுந்த அன்பாக இருந்தார். யான் பாடசாலையால் வந்து தினமும் அன்னை சிவத்தமிழ்செல்வியைச் சந்தித்து விட்டு அலுவலகத்தில் இவரோடு உரையாடிக்கொள்வேன். தேவஸ்தான இணைச் செயலாளராக யான் நியமிக்கப்பட்ட நாள் முதல் கூடுதலான நேரம் இவரோடு இணைந்து பணியாற்றினேன். "அருள்ஒளி" சஞ்சிகை வெளியீடு தேவஸ்தானத்தால் ஆரம்பிக்கப்பட்ட போது யான் ஆசிரியராகவும் அமரர் துணை ஆசிரியராகவும் சிறந்த ஒத்துழைப்பு வழங்கினார்.

ஆலயத்தின் வெளியீடுகள் அனைத்தையும் எழுத்துப் பிழை பார்த்துத் திருத்துவதில் வல்லமை மிக்கவராக விளங்கிய அமரரிடம் கட்டுரைகள் எழுதும் ஆற்றல் சிறப்பாக இருந்தது. அன்னையின் அறப்பணிகள் தொடர்பாக பத்திரிகைகளுக்கு பல கட்டுரைகளை காலத்துக்குக் காலம் எழுதினார்.

மாவை ஆதீனத்தின் உத்தரவைப் பெற்று மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வரலாற்றை நூலாக வெளியிட்டார். கீரிமலை நகுலேஸ்வரப் பெருமானின் கும்பாபிஷேக மலர் வெளியிடப்பட்டபோது நூலாக்கக் குழுவில் பெரும் பங்கு வகித்தார். மூதறிஞர் குமாரசாமி சோமசுந்தரம் அவர்களின் நாவலர் பெருமான் பற்றிய நூலை வெளியிடுவதில் அயராது உழைத்தார். "கோப்பாய் பதியில் சைவமும் தமிழும்" என்ற ஆய்வு நூலை மறுபதிப்புச் செய்து வெளியிட்டார். பண்டிதமணியின் கடிதங்கள் கட்டுரைகளைப் பாதுகாத்து வந்தார்.

நிறைந்த ஞாபக சக்தியும் எழுத்தாற்றலும் வரலாறுகளைத் தொகுக்கும் சிறப்பும் இவரது தனித்துவ ஆற்றல் எனலாம். கடந்த ஆறு ஆண்டுகளாக சிவத்தமிழ்ச் செல்வி சைவத் தமிழ் ஆய்வு நூலகத்தின் நூலகராக சிறந்த பணியாற்றிய அமரர் அவர்கள் ஆய்வுக்காக வரும் ஆய்வாளருக்கு பெருந்துணை செய்து வந்தார். அன்பாக பழகி பலருடன் கடிதங்கள் ஊடாகவும் தொலைபேசி ஊடாகவும் தொடர்பு கொள்ளும் பண்பினை கொண்ட அமரருக்கு பலரது தொடர்பு சிறப்பாக இருந்து வந்தது.

இறை நியதியை யா்ர் அறிவார்? 16.09.2019 வழமை போல் ஆய்வு நூலகத்தில் பணி செய்து விட்டு பிற்பகல் திடீரென நெஞ்சு வலிக்குது என்று அலுவலகப் பணியாளருக்குச் சொன்ன அமரரை ஆலயப் பணியாளர்கள் தெல்லிப்பழை வைத்தியசாலையில் உடன் அழைத்துச் சென்றனர். மாரடைப்பு நோய் என்று அவர்கள் வைத்தியத்தை தொடங்கினர். எனக்குத் தொலைபேசியில் அறிவித்தனர். மேடை நிகழ்வில் இருந்த யான் உடனே விடைபெற்று தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு சென்று பார்த்தேன். இரு கைகளையும் கூப்பி "எனக்கு ஒன்றுமில்லை ஒருசில நாளில் வந்துவிடுவேன்" என்று அன்பாகப் பேசினார். மறுநாள் முதல் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர பிரிவில் சிகிச்சை பெற்று இதய சிகிச்சைப் பிரிவில் 25 நாட்களாக அவருக்கு வைத்தியர்கள் சிகிச்சை அளித்தனர். என் செய்வது? விதிப்பயன் சிகிச்சை பலனின்றி 16.10.2019 காலை 7.40 மணியளவில் இறையழைப்பை ஏற்று விடைபெற்று விட்டார். அவரது பிரிவுச் செய்தி கேட்டு அவரோடு பழகிய அத்தனை பேரும் பெரும் துயருற்றார்கள். அவரது மருகரின் இல்லத்தில் இடைக்காட்டில் 18.10.2019 அன்று இறுதிச் சடங்குகள் இடம்பெற்று அவர் பிறந்த மட்டுவில்மண் மயானத்தில் அக்கினியில் சங்கமமானார். அன்னாரின் பூதவுடலுக்கு மூன்று தினங்களும் பெருந்தொகையான மக்கள் அஞ்சலி செலுத்தினர். எனது தலைமையில் அஞ்சலிக் கூட்டமும் இடைக்காட்டு இல்லத்தில் இடம்பெற்றது. துர்க்கை அம்மன் ஆலய வரலாற்றில் அமரர் சிவபாலனின் வாழ்வு மறக்க முடியாதது. துறவு வாழ்வாக தன் வாழ்நாளை துர்க்கை அம்மன் கோவில் பணிக்கு அர்ப்பணித்த பெருந்தகையின் ஆத்மா சாந்தி பெறுவதாக!

# விநாயக தத்துவம்

சைவப்புலவர் ருத்திராதேவி பகீரதன், தெல்லிப்பழை

முக்கண்ணும் ஐந்துகரமும் ஒற்றைக் கொம்பும் பானை வயிறும் யானை முகமுங் கொண்ட விநாயகரின் தோற்றம் அற்புதமானது. உயர்திணை அஃறிணை என்னும் திணைப்பாகுபாடு, ஆண், பெண் பால் வேற்றுமை என்பவற்றைக் கடந்து நிற்பவர் விநாயகர். அதாவது முகம் யானையுடையதாகவும், உடல் தேவ உடலைப்போன்றும், கால்கள் பூதகணங்களைப் போன்றும் காணப்படுகின்றது. விலங்கு வடிவில் தெரிவதால் அஃறிணையாகவும், தேவ, மானிட வடிவில் தெரிவதால் உயர்திணையாகவும், ஒற்றைக் கொம்பு ஆண் என்றும் ஒடிந்த கொம்பு பக்கம் பெண்ணாகவும் விளங்குவதால் பால் வேறுபாடின்றியும் விநாயகர் தோற்றம் அமைந்துள்ளது.

எல்லா தெய்வங்களின் சொரூபநிலையும் சகல ஜீவராசிகளும் விநாயகரின் உடலில் அடக்கம். அதாவது விநாயகரது நாபி - பிரம்ம ரூபம் எனவும், விநாயகரது முகம் - விஷ்ணு ரூபம் எனவும், விநாயகரது இடப்பாகம் - சக்தி ரூபம் எனவும், விநாயகரது வலப்பாகம் - சூரியரூபம் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

விநாயகரின் தோற்றப் பொலிவு பற்றி திருமுறைகளும் சைவ சித்தாந்த நூல்களும் சிறப்பாக எடுத்துரைக்கின்றன. எடுத்துக்காட்டாக 'பிடியதன் உருவுமை...' என சம்பந்தரும் 'கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலும்..' என அப்பரும், 'பெருவயிறன் கணபதி யொன்றறியான்..' என சுந்தரரும், 'ஐந்து கரத்தனை ஆனை முகத்தினை...' என திருமூலரும், 'தடக்கை ஐந்துடைத்தாள் செவி நீண்ட முடி கடக்களிறு...' எனச் சேக்கிழாரும், 'ஒரு கேட்டான் இரு செவியன் மும் மதத்தன் நால்வாய் ஐங்கரத்தான்...' என சிவஞானசித்தியார் காப்புச் செய்யுளிலும் கூறப்பட்டுள்ளது.

### திருவடி

மனித உயிரை மும்மலச் சிறையிலிருந்து விடுவிக்க வல்லமை உடையது இறைவனது திருவடி ஆகும். ஞானமே விநாயகரின் திருவடிகள். பசுஞான பாசஞானங்களால் அறியப்படாதது பதிஞானம். விநாயகரின் திருவடிகள் பக்தர் உள்ளத் தாமரையில் பொருத்த மலவாதனை நீங்கி வருவினையும் செய்வினையும் சேராது போக, என்றும் இன்பம் பெருக உதவி புரிகின்றன. 'தத்துவ நிலையைத் தந்து எனை ஆண்ட வித்தக விநாயக விரைகழல் சரணே' என விநாயகர் அகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பேழை வயிறு

ஆகாயம் எல்லாப் பொருள்களும் தன்னிடத்தே ஒடுங்கவும் உண்டாகவும் இடம் தந்து இருப்பது போல், விநாயகரது பெருவயிறு எல்லா உலகங்களும் உயிர்களும் தம்முள் அடங்கி இருப்பதைக் குறிக்கின்றது. அதாவது சகல காரண

தத்துவ சக்தியாக உள்ளது பேழை வயிறு ஆகும். இப்பேழை வயிறு 'மத்தள வயிறனை உத்தமி புதல்வனை..' என திருப்புகழிலும், 'பேழை போல் அகன்ற பெருங்குட வயிறும்' என பிள்ளையார் கதையிலும் சிறப்பிக்கப்படுகின்றது.

### ஐந்து கரங்கள்

விநாயகரின் ஐந்து கரங்களில் பாசம் ஏந்திய கை படைத்தலையும், அங்குசம் ஏந்திய கை அழித்தலையும், அபயமளிக்கும் கை காத்தலையும், வரமளிக்கும் கை அருளலையும், துதிக்கை மறைத்தலையும் குறிக்கின்றது. விநாயகரின் கரங்களை 'ஐந்து கரத்தனை ஆனை முகத்தினை...' என திருமூலரும், 'தடக்கை ஐந்துடைத்தாள் செவி...' என சேக்கிழாரும், ஐந்து கரத்தானை முகப் பெருமானே..' என அருணகிரிநாதரும் போற்றிப் பாடியுள்ளனர்.

### கொம்புகள்

விநாயகரில் காணப்படும் இரண்டு தந்தங்களில் ஒடிந்த கொம்பு அபர ஞானத்தையும், முழுமையான கொம்பு பரஞானத்தையும் உணர்த்துகின்றது. 'தவளக் கிம்புரித் தடமருப் பிரண்டும்' என பிள்ளையார் கதையில் குறிப்பிடப்படுகின்றது.

### பெரிய காதுகள்

'தங்கிய முறம் போல் தழைமடிச் செவியுமாய் ஐங்கரத்தண்ணல்' என பிள்ளையார் கதையில் குறிப்பிட்டுள்ளவாறு பெரிய காதுகள் இரண்டும் உயிர்களுக்குக் கன்மவாதனை தாக்காமல் காத்து, வினை வெப்பம் போக்கி அருள்வன. எல்லாவற்றையும் அறியும் தன்மை உடையன என்பதனைக் குறிப்பன விநாயகரின் காதுகள் ஆகும்.

### மூன்று கண்கள்

வலது இடது கண்கள் இகஞானக் காட்சியையும் நெற்றிக்கண் பரஞானக் காட்சியையும் தருகிறது. முத்தொழிலைக் குறிக்கின்றது. 'மூன்று விழி நால்வாய் ஆனை முகன்' என சேக்கிழாரும், 'ஒற்றை மருப்பும் ஒரிரண்டு கைத்தலமும் வெற்றி புனைந்த விழிமூன்றும்' என பிள்ளையார் கதையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பிறை

உடல் தேய்ந்து போனாலும் களங்கம் இல்லாதது பிறை. அதுபோல் தவ விரதங்களால் அறியாமை தேய்ந்து உண்மைக்கு ஞானம் பெற்றவர்களே மேன்மை பெறுவதற்கு உரியவர்கள் என்பதைக் காட்டும் அடையாளம் ஆகும்.

### மும்மதம்

உவமையிலாக் கலைஞானமும் உணர்வரிய மெய்ஞானமும், திருப்பெருகு சிவஞானமும் ஆகியவை மூன்று மதங்கள். இதனையே திருவருட்பயனில் 'நற்குஞ்சரக்கன்று நண்ணில் கலை ஞானம் கற்குங் சரக்கன்று காண்' எனக் குறிப்பிடப்படுகின்றது.

**சர்ப்பாபரணம்**

பாம்பு என்பது குண்டலி சக்தியின் வடிவம். மூலாதாரத்தில் குண்டலியே விநாயகர் விளங்கும் இடம். அச்சக்தியானது சுருண்ட நிலையிலிருந்து நிமிர்ந்தால், பாம்பு படம் விரித்து எழுந்து நின்றதுபோல் மூலாதாரத்திலிருந்து சகஸ்திராரம் வரை வியாபித்து ஆன்மாவிடம் சிவம் பிரகாசிக்கச் செய்யும் என்பதைக் குறிக்கின்றது.

**யானை முகம்**


யானை முகம் ஓம் என்னும் பிரணவ மந்திரத்தைக் குறிக்கின்றது. விநாயகர் யானைமுகம் கொண்டதற்கு பல காரணங்கள் உள்ளன. விலங்கினங்களுள் யானை மிகப் பெரியது. ஆற்றல் வாய்ந்தது. எதையும் சிரமம் இல்லாமல் சுமப்பது. எவ்வித பெரிய படையானாலும் அஞ்சாமல் எதிர்த்து வெற்றி பெறும் தன்மை உடையது. காலம் வரும் வரை காத்திருந்து எதிரியை அழிக்கும் இயல்புடையது.

**மூஷிக வாகனம்**

ஆணவம் அடங்கிய ஆன்மாவின் வடிவம், மலம் நீங்கிய ஆன்மா இறைவன் திருவடியில் ஆனந்தம் பெருவாழ்வு பெறும். 'முப்பழம் நுகரும் மூஷிக வாகன...' என விநாயகர் அகவலில் போற்றப்படுகிறார்.

*1008* அண்டங்களையும் *108*யுகங்களையும் ஆண்ட கஜமுகாசுரன் இறைவனை வேண்டி தேவர்களால் மனிதர்களால் ஆயுதங்களால் மிருகங்களால் தான் சாகமுடியாதபடி வரம் பெற்றான். எனவேதான் எல்லா உருவம் கலந்த விநாயகர் வடிவம் கொண்டு கஜமுகனைச் சங்கரித்தார். எனவே விண்ணுக்கும் மண்ணுக்கும் நாத வடிவமாய் விளங்கும் விநாயகரின் தத்துவார்த்தங்களை உணர்ந்து, தரிசித்து இக, பர சௌபாக்கியங்களைப் பெற்று பிறவிப் பெரும்பயனை அடைவோமாக!

**கொல்லங்கலட்டி பிள்ளையார் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள மணிமண்டபம் திறப்பு விழா நிகழ்ச்சி**





# சூரிய வழிபாட்டுப் பின்னணியில் முருகன்

செல்வி. பூலோகம் செல்வதியம்மா
B.A (Hons), (சிறப்புக்கலை தமிழ்)

பண்டைய காலகட்டமானது எதுவித விஞ்ஞான வளர்ச்சியுமற்ற மனித முயற்சியை மட்டுமே நம்பி நகர்வுற்ற வாழ்வு வாழ்ந்த மக்கள் இயற்கையை சக்தி நிலையாகப் போற்றி வழிபட்டனர். இவ் இயற்கையின் சீற்றங்களைக் கண்டு அச்சமும் கொண்டனர். அதனால் அதனை வழிபடவும் செய்தனர். இத்தகைய வழிபாட்டிலே விடியலைக் கொடுக்கும் கதிரவனை மக்கள் முதன்மையாகப் போற்றினர். இத்தகைய சூரிய வழிபாடானது இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளிற்கு முற்பட்டது. இவ் வழிபாடானது முருக வழிபாட்டுடன் எத்தகைய தொடர்பினைப் பெறுகின்றது. சங்க காலத்திலிருந்து சமகாலம் வரை போற்றப்படும் முருகன் இன்று உலகலாவிய ரீதியிலே பெரிய பெரிய ஸ்தலங்களால் அமையப் பெற்று வழிபாடு செய்யுமளவிற்கு வரலாற்றுப் புகழ் வாய்ந்த நிலையிலும் வழிபடப்படுகின்றான். இம் முருக வணக்கம் ஆதி காலத்தில் வழிபடப்பட்ட சூரிய வணக்கமா? சூரியனும் முருகனும் ஒன்றா? சூரிய வணக்கம் முருக வழிபாட்டின் தோற்றமாகியதா? என்ற பல்வேறு வினாக்களுக்கு விடை காணும் நிலைப்பாட்டுடன் இக் கட்டுரை அமைந்துள்ளது.

## சூரிய வழிபாட்டுப் பின்னணியில் முருகன்

ஆரம்ப காலகட்டத்திலே மக்களது வழிபாட்டு அம்சங்கள் யாவும் இயற்கை குறித்த நிலைப்பாடுகளாகவே அமையப்பெற்றன. தங்களது வாழ்வியலோடு சம்பந்தப்பட்ட அனைத்து நிலையான இயற்கை அம்சங்களையும் மக்கள் வழிபட்டநிலை பல சான்றாதாரங்கள் மூலம் நிரூபணமாகியுள்ளது. அதிலே சூரியவழிபாடு என்பது பிரதான அங்கம் வகித்துள்ளது. காரணம் இருளைப்போக்கி விடியலைக்கொடுத்து மக்களது இயங்கு சக்திக்கு முதன்மைக் காரணகர்த்தாவாக சூரியனே விளங்கினான். எனவே அவனை அனைத்து மக்களும் தமது முதன்மைக் கடவுளாகப் போற்றி வழிபட்டனர். ஐரோப்பா, தென் அமெரிக்கா, சீனா போன்ற நாடுகளில் சிதைவடைந்த நிலையிலே சூரியனது கோயில்கள் இன்றும் காணப்படுகின்றன. எகிப்திலே சூரியவணக்கம் நிலவியுள்ளது. கிரீஸ் நாட்டிலே "அப்பாலோ" என்ற பெயரினால் சூரியன் வழிபடப்பட்டுள்ளான். யப்பான் சக்கரவர்த்தி சூரியகுலத் தோன்றல் என்றும், இந்தியாவில் பழங்காலப் பேரரசர்கள் சூரியகுலத்தோன்றலாகத் தொடர்ச்சியாக ஆட்சி செய்த சான்றாதாரங்கள் உண்டு. எடுத்துக்காட்டாக இராமாயணத்திலே தசரதச் சக்கரவர்த்தி சூரியகுலத் தோன்றலாகவே காட்டப்பட்டுள்ளான். அவனது வழித்தோன்றலான இராமனையும் சூரியகுலத்து விடிவெள்ளியாகவே மக்கள் போற்றியுள்ளனர். ரிக்வேதம் சூரியனை ஆரியர்கள் வழிபட்ட நிலைபற்றி எடுத்துக்கூறுகின்றது. இத்தகைய

சூரியவழிபாடானது எவ்வாறு முருகவழிபாட்டுடன் பொருந்தத்தக்கதாக அமைகின்றது என நோக்கலாம்.

முருகவழிபாடு இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது ஆராய்ச்சியாளர்களது கருத்து. அதற்கான சான்றாதாரங்கள் புதைபொருள் ஆராய்ச்சிமூலம் கிடைக்கப்பெற்று நிரூபணமும் செய்யப்பட்டுள்ளது. இன்று உலகளாவிய ரீதியில் கௌமாரம் எனும் தனிப்பிரிவின் பெருவிருட்சமாக முருக வழிபாடானது போற்றப்படுகின்றது. குறிஞ்சி நிலத் தெய்வமாக முருகன் போற்றி வழிபாடு செய்யப்பட்டுள்ள நிலை இலக்கியங்கள் ரீதியாக அறியக் கூடியதாக உள்ளது.

**"சேயோன் மேய மைவரை உலகம்"**

**(தொல்காப்பியம் பொருளதிகாரம்)**

என்கிறது தொல்காப்பியம்.

***"ஆறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயில்"***

**(நல்லைக்குமரன் மலர், இதழ் 23, ப. 45.)**

என்கிறது சிலப்பதிகாரம். சங்க இலக்கியங்களான புறநானூறு, ஐங்குறுநூறு, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, பரிபாடல் என்பன முருகனைச் சுட்டிக்காட்டத் தவறவில்லை. முழுக்க முழுக்க முருகனது சிறப்பினையே காட்டிநிற்கின்றது. குறிஞ்சிநிலமோ மலைப்பகுதி சார்ந்தது. இங்கே கொடிய விலங்கு, கும்மிருட்டு, பூரான், நட்டுவக்காலி, கொடுக்கான் பூச்சி, பாம்பு, தேள் போன்ற விஷ ஜந்துக்கள் மக்களை இருள்வேளைகளில் துன்புறுத்தின. சூரியனற்ற இரவுவேளை மக்களுக்கு அஸ்தமித்த வாழ்வாகவும், பயம், வேதனை, திகில் போன்ற பல இன்னல்களைத் தருவதுமாகவும் அமையப்பெற்றுள்ளது. இந் நிலைகளற்ற நிலை சூரியன் வரவாலேயே இடம்பெற்றுள்ளது. இருளையும் குளிரையும் தம்மிடமிருந்து விரட்டியடிக்கின்ற சூரியனை மக்கள் பெரிதும் போற்றினர். எனவே குறிஞ்சி நிலத்து மக்களது வழிபாடு சூரியபகவானது வழிபாடாகவே அமையப்பெற்றுள்ளது. இச்சூரியபகவானையே மக்கள் முருகனாகவும் வழிபட்டனர் என்பர். "பெரி" என்பவரது கருத்து இங்கே எடுத்துக்காட்டத்தக்கது.

"மாக்கடலினின்று நிவந்தெழுந்த இளஞாயிற்றின் இயற்கையழகில் உள்ளம் தேய்ந்த அன்பர்கள் அதனையே இறையென வழிபட்டு வந்தனர். அதுவே பின்னர் நீலமயில் மீது வீற்றிருக்கும் செவ்வேள் வழிபாடாக மலர்ந்தது."

***(சாரங்கபாணி. இரா., 1971, பரிபாடல், ப.166)***

இவர் இப்படி உரைப்பதற்கு தக்கசான்றுள்ளது. அதாவது மலைவாழ் மக்கள் பெருந் துன்பமடைந்த நிலை இருள் எனும் நிலைப்பாட்டினால்தான். இவ் இருள் என்பது "சூர்" எனவும் அழைக்கப்பட்டிருக்கலாம். ஏனெனில் "சூர்" எனும்

சொல்லுக்கு பின்கலநிகண்டு "அச்சம், துன்பம், பிணி, தெய்வத்தன்மை" எனும் பொருட்களை சுட்டிநிற்கின்றது. முருகன் சூரனை அழித்தான் என்பது எமக்குப் புராணங்கள் வாயிலாகக் கிடைக்கும் பிற்பட்ட செய்தி. "சூர் எனும் இருளை அகற்றினான்" என்றும் நாம் இதனைக் கொள்ளமுடியும். எனவே சூரினை அகற்றி ஒளியினைக் கொடுத்த கதிரவனே பிற்காலத்தில் சூரனை அழித்த கந்தனாகக் கொள்ளப்பட்டான் எனலாம். இதற்குச் சான்றாக சங்கநூல்களில் ஒன்றான அகநானூற்றின் பாடலடி துலங்குகின்றது.

**"சூர்மருங்கறுத்த சுடரிலை நெடுவேல்"**
**(பின்கல நிகண்டு (பிங்கலந்தை ), 1998, சூ.3563**

அதுமட்டுமல்ல,

**"வெண்டிரைப் பரப்பிற் கடுஞ்சூர்க் கொன்ற பைம்பூட் சே எய்"**
**(வேங்கடசாமி நாட்டார், 1944, அகநானூறு, செ. 59)**

எனும் பாடலடியும் நமக்குக் கைகொடுத்து உதவுகின்றது. இங்கு சேஎய் என்பது முருகனையே குறிக்கின்றது. வெண்மையான மணலைக்கொண்ட கடற்பரப்பிலே கடுமையான இருளைப் போக்கிய இளஞாயிற்று வடிவிலே பசுமையாகத் தோன்றிய முருகன் எனவும் நாம் பொருள் கொள்ளலாம். பரிபாடல் சுட்டும்போது,

**"வெண் சுடர் வேல்வெள் விரைமயின் மேல் ஞாயிறு"**
**(பத்துப்பாட்டு, பெரும்பாணாற்றுப்படை, பாடல், 457)**

என்கிறது. வேலினைக் கையிலே தாங்கி மயில்மேல் அமர்ந்து வெண்மையான சுடரைப் பரப்பிய சூரியன் என முருகன் அடையாளப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. திருமுருகாற்றுப்படையிலே இடம்பெறும் பாடலடி இக் கருத்திற்கு வலுச்சேர்க்கின்றது.

**"உலம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு**
**பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டா அங்**
**கோவற இமைக்குஞ் சேன்விளங் கதிரொளி"**
**(மேலது இ ப. 458)**

எனும் அடிகள் உலகத்தினது இருளை அகற்றி உலக விடிவிற்குக் காரணமாய் அமைகின்றது. இவ்விண்ணுலகமே போற்றி வணங்கும் சூரியன் முருகனது ஒரு முகம் என்கின்றார் நக்கீரர்.

**"மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப் பல்கதில் விரிந்த நெடுமுகம்"**
**(மேலது.இ ப. 256)**

எனும் அடி மேற்கூறிய கருத்தினைத் திடகாத்திரமாக காட்டிநிற்கின்றது, சாரங்கபாணி அவர்களும் தனது கருத்தில் இதனைப் பதிவு செய்துள்ளார்.

"காலையிற் தோன்றும் புதுஞாயிறு இளமைச் செவ்வி உடையதாதலால் அதன்கண் நிற்கும் இறைவன் முருகன் எனப்பட்டான். முருகன் என்பது இளைஞன் என்றும் பொருள்தரும் தனித்தமிழ்ச் சொல்லாகும். இங்ஙனம் பகலவன் ஒளியில் அமர்ந்து உலகத்துள்ள மண்ணுயிர்கட்கு அருள்வழங்கும் எல்லாம்வல்ல இறைவனே பண்டைத்தமிழ் சான்றோர்களால் முருகனாக வைத்து வழிபட்டுள்ளமையைக் காணலாம்."

**(திருமுருகாற்றுப்படை, பாடல், 91)**

என்கிறார். வடமொழி நிகண்டு முருகனைப் போற்றும்போது,

*"சத்ருன் சோஷய தீதி ஸ்கந்த"*

**(மறைமலையடிகள், 1929, கடவுளுக்குமாறான கொள்கைகள், ப. 100)**

என்கிறது. இதன் அர்த்தம் என்னவெனில் பகைவரது ஆற்றலை வற்றச் செய்பவன் என்பது. இவ்வாற்றல் சூரியபகவானுக்கு உண்டு. சூரியன்முன் யார் நின்றாலும் அவனது வெண்மையின் காரணமாக நீர்த்தன்மை வற்றப்பெற்று களைப்படைவர் என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. சங்ககால மக்கள் முருகனை வழிபாடு செய்யும்போது,

*"குருதியளந்த சிவந்த செந்திணையைப் பரப்பி"*

**(நல்லைக்குமரன் மலர், இதழ். 23, ப. 45)**

வழிபட்டதாகக் கூறப்படுகின்றது.

எனவே, தொகுத்து நோக்கும்போது இற்றைக்கு பல்லாயிரம் நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட இயற்கை வழிபாடுகளில் ஒன்றாக விளங்கிய சூரிய வழிபாடானது, முருக வழிபாட்டுடன் தொடர்புபட்டு நிற்கும் அதேவேளை முருக வழிபாடே சூரியவழிபாடாகவும் அமையப்பெற்றிருக்கலாம். இருப்பினும் அதன் சான்றாதாரங்கள் வேறுவிதமாக திசைதிரும்பிய காரணத்தினால் சூரியவழிபாடும் முருகவழிபாடும் சௌரநெறியாகவும், கௌமாரநெறியாகவும் இரு தனிக் கிளைகளில் வளர்ச்சிபெற்றுள்ளது. எனது கருத்துக் கணிப்பின்படி பண்டையகால மக்கள் முருகனையே சூரியனாக வழிபட்டுள்ளனர் என்பது இலக்கியச் சான்றாதாரங்களின் ஊடாகத் தெரியவருகின்றது. இதனை ஆதாரமாகக் கொண்டு ஆதிகால மக்களது சூரியவழிபாட்டு முறை முருக வணக்கத்துடன் தொடர்புபட்டதே என்பதனை முடிவாகக் கொள்ளலாம். இருப்பினும் எமது இந்து மதம் ஒவ்வொரு கடவுள் வாயிலாகவும் ஓர் இயற்கை நிலையினைப் புதைத்து நிற்கின்றது. எனவே சூரியன், முருகன் என்பதையும் தாண்டி எமது மதம் எல்லா இறைவர்களையும் ஒருமுகப் புதைத்து "ஏகம் சத்" எனும் மகுட வாசகத்திற்கு உயிர் கொடுப்பதனை இந்தக் கட்டுரையின் மூலமாக அறிந்து கொள்வோம். அத்தோடு இயற்கைத் தெய்வத்தினை முதன்மைப் படுத்தி வழிபாடு செய்த எமது இந்து மதத்தினை மெச்சுவோமாக.

***"மேன்மை கொள் சைவநீதி"***

# திருநாவுக்கரசுநாயனாரும், எண்ணலங்காரமும்

சைவப்புலவர் திருமதி லீலாவதி அருளையா

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும். இவ்வடிப்படையில் திருநாவுக்கரசுநாயனாரும் எண்ணையும் எழுத்தையும் கொண்டு இறைவனது திருவருளின் தன்மையையும், அவரின் அருட்கொடையையும் மிக இலகுவாகப் புரிந்து கொள்ளத்தக்கதாகப் பாடியுள்ளார். இவ் எண்ணலங்காரத்தை ஒன்று தொடக்கம் பத்து எண்கள் வரை வைத்துப் பாமாலை புனைந்துள்ளார். மேலும் நான்காம் திருமுறையில் "ஒன்று கொலாம்..." எனும் தொடரில் எடுத்தோதி, விடம்தீண்டி இறந்த அப்பூதியடிகளின் மகனை உயிர்பெறச் செய்த அற்புதத்தையும் செய்துள்ளார். "ஒன்று வெண்பிறைக்..." எனத் தொடங்கி ஐந்தாம் திருமுறையிலும் பத்துவரை எண்ணலங்காரம் செய்துள்ளார்.

இவை இரண்டு பதிகங்களும் பொதுவானவை. தனித் திருக்குறுந் தொகையிலமைந்தவை. ஒவ்வொரு பாடலும் தனித்துவமானவை. அவற்றை எண் வரிசையில் ஆராய்வோம்.

*ஒன்றுகொ லாமவர் சிந்தையுயர் வரை*
*ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்*
*ஒன்றுகொ லாமிடு கொண்டலைக் கையது*
*ஒன்றுகொ லாமவர் ஊர்வது தானே* (4:18:1)

இப்பாடல் நான்காம் திருமுறையில் பதினெட்டாம் பதிகத்தில் முதலாவதாகும். இதன் விளக்கத்தினை நோக்குவோம்.

மனம் ஒன்றுபட்டுச் சிவபிரானைச் சிந்தித்தால் எமது வாழ்வு, சிந்தை இமயமலை போல் உயர்வானதாகும். இறைவன் ஒற்றைப் பிறைச் சந்திரனை சிரசின் சடாமுடியில் வைத்திருப்பார். ஒற்றை வெண்தலையோட்டில் இடுபிச்சை ஏந்திய கையையுடையவர். ஒற்றை இடபத்தை (நந்தியை) தனது வாகனமாகக் கொண்டு தர்மத்தை விளக்க நிற்பவராவார்.

***ஒன்று வெண்பிறைக் கண்ணியோர் கோவணம்***
***ஒன்று கீளுமை யோடும் உடுத்தது***
***ஒன்று வெண்தலை யேந்தியெம் உள்ளத்தே***
***ஒன்றி நின்றங்கு உறையும் ஒருவனே*** (5:89:1)

ஒன்றேயொன்று என மேவும் ஒற்றைப் பிறைச்சந்திரனைத் தன் சடாமுடியில் தலைமாலையாகத் தரித்துள்ளார். அவர் வேதம் நான்கையும் ஒன்றாக்கி, ஒருதடவை மாத்திரம் உடுத்திக் (அது வேறு நீக்கி மாற்றப்படுவதில்லை) கொண்டு உமாதேவியாருடன் ஒருவராக (அர்த்தநாரீசுவரராக) விளங்குகின்றார். பிரமனுடைய


ஐந்து தலைகளில் ஒன்றைக் கிள்ளி அவனுடைய ஆணவத்தை அடக்கியதுடன், தாருகாவனத்து முனிவர்களின் செருக்கை அடக்கியாள்வதற்காக அந்தக் கபாலத்திலேயே (பிரமனின் தலையோடு) பலியேற்றார்.

இவ்வாறான மறக்கருணை (உயிர்களைப் பக்குவப்படுத்தும் திருவருள்) உடையவர் சிவனாவார். இவ்விறைவனை ஒரே மனத்தோடு ஒன்றி நின்று வழிபாடு செய்தால் எமது உள்ளங்களில் வந்து குடியிருப்பார். அவர் ஒருவரே எம்மை ஆதரித்து, ஆட்கொண்டு வீடு பேறென்னும் முத்திநிலை அடைய வைப்பார்.

*ஒருமனத்தே ஒன்றியிருந்து நினைமின்!*
*ஒருகுலம் யாவரும் ஒருவனே தேவன் என்று*
*ஒன்றுபட்ட வாழ்வைப் பெற்று,*
*ஒன்றாக வாழ அப்பர் வழி நின்று*
*ஒன்றாகி உழைப்போம்*
*ஒன்றாக வாழ்வோம். உன்னதம்*
*ஒன்றே பெறுவோம். இது இன்றைய*
*காலத்தின் கட்டாயமாகும்.*

---

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் விஜயதசமி தினத்தின்போது இடம்பெற்ற வித்தியாரம்பம் நிகழ்ச்சி







# பக்தியின் பயன் பக்தியே

பௌராணிகர் பிரமஸ்ரீ வ.குகசர்மா

அன்பின் முதிர்ச்சியே பக்தி எனப்படும். வழிபாட்டு நெறியில் அன்பின் முதிர்ச்சி அவசியமாகும். வழிபாடாகிய வயலில் அன்பு எனும் விதையை இட்டு இறைவன் அருள் என்னும் நீரைப் பாய்ச்சினால் வளர்ந்து வருவது முறுகிய பக்திதான். பக்தியால் வழிபடுதலையே தொண்டர் விரும்புவர். இதனை,

*"அருச்சனை வயலுள் அன்பு வித்திட்டுத்*
*தொண்ட உழவர் ஆரத்தந்த*
*அண்டத்து அறம்பெறல் மேகன் காண்க"*

என மணிவாசகர் எடுத்துக் கூறுகிறார்.

பக்தி நிறைந்த வழிபாட்டைவிட வேறு வழிபாடும் இருக்கின்றதா என்றுதான் பெரியோர்கள் கூறிச் சென்றார்கள். தொண்டர்கள் பக்தி வழிபாடு களங்கமற்றது என்றாலும் பிரதியுபகாரம் கருதும் வழிபாடும் உண்டு. பிரதியுபகாரம் கருதும் வழிபாடு காமியம் எனவும், ஒன்றும் வேண்டாம் வழிபாடு ஓமியம் எனவும் கூறப்படும். தேவர்கள் காமிய வழிபாடு புரிந்தார் என்பதை,

*"வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ் வான்மனம் நின்பால்*
*தாழ்த்துவதும் தாமுயர்ந்து தம்மை எல்லாந் தொழவேண்டி"*

என்னும் திருவாசக அடிகள் நமக்கு உணர்த்துகின்றன.

தொண்டர்கள் ஐம்புல ஆசைகளையும் அடக்கியவர்கள். உள்ளம் கள்ளமற்று இருந்தால்தான் ஞானம் பிரகாசிக்கும். இதற்கு அறிவின் பயனாகிய நல்லொழுக்கம் அவசியம்.

*"அறிவென்னுந் தாள்கொழுவி ஐம்புலந் தம்முள்*
*செறிவென்னும் திண்கதவம் செம்மி"*

என்னும் உயரிய கொள்கையே தொண்டர் கொள்கையாக இருந்தது. இதனை மற்றொரு விதமாகச் சொன்னால் ஐம்புலன்களையும் இறைவனாகிய ஒருவர் வழிச்செலுத்தினார். தேவர்கள் அப்படியல்ல. தாங்கள் மேலும் மேலும் இன்பத்தை நுகர வேண்டுமென்பதற்காக இறைவனை விழிப்புடன் வணங்கினார்கள். இறைவனைத் தொழுவதில் அண்டர்களுக்கும் தொண்டர்களுக்கும் மனநிலையில் வித்தியாசம் உண்டென்பது தெளிவு. தேவர்கள் காமியஞ்செய்து காலங்கழிப்பவர்கள். தொண்டர்கள் ஓமியஞ்செய்து உறுதியைத் தேடுபவர்கள். பின்வரும் ஒரே பாடலில் இருவித வழிபாட்டையும் கந்தபுராண நூலாசிரியர் தெளிவாகக் காட்டுந்திறம் உணர்ந்து போற்றுதற்குரியது.

"கண்டு கேட்டவை யுண்டுயிர்த் துற்றறி கருபவி
கொண்ட ஐம்புலன் ஒருங்குற நடாத்திய கொள்கைத்
தொண்டர் கூட்டமும் விழிவழிப் புனலுகத் தொழுங்கை
அண்டர் கூட்டமும் ஆலயந் தொறும்தொறும் அறாவால்"


வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன் இறைவன். இறைவன் மீது பக்தி செய்பவர்களும் அந்த நற்பண்பை உடையவர்கள். இறைவன் மிகப் பெரியவன். அவன் மோட்சம் என்னும் அழியாத பேரின்ப வீட்டைக் கொடுப்பவன். தொண்டர்களோ அந்தப் பேரின்ப வீட்டையும் வேண்டாமென்று சொல்லி விடுகிறார்கள். எனவே தொண்டர்கள் இறைவனிலும் உயர்ந்தவர்களாய் விடுகிறார்கள்.

"பக்தி என்பது தானே பயனாய் இருப்பது" உபநிடத வாக்கியம். பரிபாடல் என்னும் இலக்கிய நூலில் திருமாலை வணங்கும் நல்லெழுதியார் என்னும் புலவர் கருத்தும் இங்கு நோக்கற்பாலது.

"...... இறைஞ்சினெம் வாழ்த்தினெம்
முன்னும் முன்னும் யாம்செய்தவப் பயத்தால்
இன்னும் இன்னும் எம்காமம் அதுவே"

இவ்வாறான பிரதிபலன் கருதா வழக்கமுடையவர்களையே உலகம் தொண்டர்கள் எனப் போற்றியது. அவர் வழிபாட்டையே சான்றோர் பின்பற்றினர். அவர்களை வீரர் எனச் சேக்கிழார் வியந்து போற்றினார்.

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்கினார்
கூடும் அன்பினிற் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"



## பன்னாலை வரத்தலம்
## கற்பக விநாயகர் பாமாலை

ச.சஜீலன், பன்னாலை

பன்னாலை வரத்தலை பதிவாழும் கற்பக விநாயகரே!
மாருதப் புரவீக வல்லியின் அகமாமுகம்தனை நீக்கியருளிய கணபதியே!
வன்னி நிழலில் கற்பகநாச்சிக்கருளிய ஐங்கரமூர்த்தியே!
அன்று ஔவைக்கு முத்தமிழ் கொடுத்து பிரபஞ்ச இயக்கத்தையும் காட்டிய முதல்வரே!
வெஞ்சின அசுரன் கயமுகனும் உமதருள்பெற்று உய்ந்தானன்றே!
அவல், பொரி, தேனுடன் மோதகமும் கொண்டுவந்து
தும்பிக்கை ஒரு நம்பிக்கை என உமதருளை வேண்டி நின்றோம் ஐயா!

# திருவடி ஞானம்

பண்டிதர் சி.அப்புத்துரை

ஞானம் என்பது பரஞானம் அல்லது மேலான அறிவு என்று பொருள் கொள்ளப்படக்கூடியது. எனவே திருவடி ஞானம் என்பதைத் தெய்வீக விளக்கந் தந்து நிற்கும் அடிகள் பற்றிய மேலான அறிவு என்று சிந்திக்கலாம். மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய நூல்களுள் ஒன்று திருவாசகம். அந்நூலின் முதலாவது பதிகமாகிய சிவபுராணம் என்னும் பகுதியின் முதலாவது அடியிலிருந்தே நாதன் தாள்களை ஐந்து தடவைகள் வாழ்த்தியிருப்பதைக் காணுகின்றோம். தொடர்ந்து ஐந்து முறை இறைவன் திருவடிகள் மேன்மைச் சிறப்பும் பெறுவனவாக என்று வழுத்தியிருப்பதையும் காணுகின்றோம். தொடர்ந்து ஏழு முறை அதே திருவடிகளைப் போற்றி வணங்கியிருக்கிறார்கள். இத்தனை வாழ்த்து வணக்கங்களுக்கு மேலாக "அவனருளாலே அவன் தாள் வணங்கிச் சிந்தை மகிழச் சிவபுராணந்தன்னை முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்" என்று குறிப்பிடுகின்றார்கள். அங்கேயும் தாள் வணக்கம் இடம் பெறுதல் கவனிப்பிற்குரியது.

*"மாய னேமறி கடல்விடம் உண்ட*
*வான வாமணி கண்டத்தெம் அமுதே*
*நாயி னேனுனை நினையவும் மாட்டேன்*
*நமச்சி வாயவென் றுன்னடி பணியாப்*
*பேயன் ஆகிலும் பெருநெறி காட்டாய்*
*.................................................."*

என்னும் திருவாசகம் இறைவன் அடிகளைப் பணியாதவன் ஒரு பேயன் எனக் காட்டுகின்றது. பேயன் புத்தியை இழந்தவன். யான் புத்திக் கூர்மை அற்றவன் என்றாலும் எனக்குப் பெருமைதரக் கூடிய நெறியைக் காட்டியருள வேண்டும் என்று வேண்டுதல் செய்கிறார் மணிவாசகர்.

"மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப் பாதமே மனம் பாவித்தேன்" என்பார் சுந்தர மூர்த்தி சுவாமிகள். வேறு எதனிடத்தும் பற்றில்லை என்றாகிய நிலையில் உன் திருவடிகளிலேயே பற்றுடையவனாகி அவற்றையே என் மனத்தினிடமாக்கிக் கொண்டுள்ளேன் என்பது அவ்வடிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. "எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ எம்பெருமான் திருவடியே எண்ணினல்லால்" என்பது நாவுக்கரசர் அங்கலாய்ப்பு. மேலனவாகிய எம் இறைவனது திருவடிகளைப் போற்றுவதல்லது வேறு எதைச் சொல்லிப் போற்ற முடியும் என்பது அவர்கள் சிந்தனை நிலை. "செல்வன் கழலேத்துஞ் செல்வம் செல்வமே" சம்பந்தப் பெருமான் உறுதி மொழி. கழலணிந்த இறைவன் பாதார விந்தங்களைப் போற்றுவதுதான், நாளும் வழிபடுவதுதான் யாம் செய்யக் கூடியது. அதுதான் எமக்குக் கிடைக்கக் கூடிய மேலான செல்வம் என்பதும் தெளிவான நிலை. எமக்கு வந்தெய்தக்கூடிய மேலான செல்வமும் அதுவே. அருளாளர்கள் அனைவருமே திருவடி ஞானம் பெற்றவர்களாய்

திருவடி சிந்தனையினின்றும் நீங்காதவர்களாய் அங்கேயே தம் சிந்தனையை நிறுத்தியவர்களாகி நிற்பது தெரிகிறது.

சம்பந்தப் பெருமான் தந்தையாருடன் குளக்கரைக்குச் செல்கிறார். குழந்தையைக் கரையில் இருத்தி விட்டு அப்பா குளத்திலிறங்கி நீராடத்தொடங்குகிறார். அவர் நீரில் மூழ்கிய வேளை தந்தையைக் காணாத குழந்தை சம்பந்தர் செம்மேனி வெண்ணீற்றர் திருத்தோணிச்சிகரம் பார்த்து “அம்மே அப்பா” என்று அழைத்தருளி அழத் திருத்தோணி வீற்றிருந்தார் பொன்மலைவல்லியுடனாகி எழுந்தருளி அழுகின்ற பிள்ளைக்குப் பொன்வள்ளத்திலே அன்னையின் திருமுலைப் பாலைக் கொடுத்து உண்ணச் செய்கின்றார். அவ்வளவிலேயே குழந்தை எல்லா வகை ஞானங்களையும் பெற்றுக்கொள்கின்றது. சம்பந்தர் சிவஞானசம்பந்தர் ஆனகதை இது. ஞானப் பாலுண்ட குழந்தையிடம் ஏற்பட்ட அதிசயிக்கத்தக்க மாற்றங்களைச் சேக்கிழார் பெருமான் காட்டுகின்றார்.

*“சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்*
*பவமதனை அரமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்*
*உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்*
*தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்”*

என்பது சம்பந்தர் பெருமான் ஞானப்பாலுண்ட பின் அடைந்த உயர்நிலையைத் தெய்வப் புலமைச் சேக்கிழார் காட்டும் கலைவண்ணமாகும். இந்த வேளையிற் கூட சிவனடிகளைச் சிந்திக்கின்ற உயர் பக்குவ நிலையே முதலிற் பேசப்படுகின்றது. அவ்வண்ணங் காட்டப்படுவது மூலம் திருவடி வழிபாட்டின் முதன்மை உணர்த்தப்படுகின்றது.

சிந்தாந்தசாஸ்திரத் தொடரில் முதனூலாகிய சிவஞானபோதம் என்னும் மேன்மை பெறு நூலின் காப்பு செய்யுள்,

*“கல்லால் நிழல்மலை வில்லார் அருளிய*
*பொல்லார் இணைமலர் நல்லார் புனைவரே”*

என்று திருவடி வணக்கத்தையே முதன்மைப்படுத்துகின்றது. அருள் வடிவினராகிக் கல்லால் மர நிழலின்கண் எழுந்தருளி இல்லாமற் செய்தருளிய முதலாசிரியரான ஸ்ரீ கண்ட பரமேஸ்வரர் மேலும் மேலும் அருள் செய்தற்பொருட்டு, சிவபெருமானின் வேறாகாதவராய் சுயம்பு மூர்த்தியாகி வந்த பிள்ளையாரது கிரியா சக்தி, ஞானா சக்தி எனும் இரு திருவடித் தாமரைகளையும் மெய்யன்பர்கள் தலைமேற் கொண்டு அமைதி பெறுவர் என்பது இதன் பொருளமைதி. எடுத்த கருமங்கள் இனிதாக நிறைவெய்தத் திருவடி வழிபாடு இன்றியமையாதது என்று உணர்த்துவது இது. பொல்லார் இணைமலர் - திருவடிகள். அவை திருவருட்சக்தி, கிரியாசக்தி, ஞானாசக்தி என்றாகித் திருவடிகளென நின்றன. “சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்” என்பது திருவருட்பயன் சொல்லும் உண்மை. சக்தியை வேறாக்கிப் பார்க்க முடியாது

என்பதால் சக்தியாகிய திருவடிகளையும் சிவனின் வேறாக்கிக் காண முடியாது. ஆகவே சிவன் தாள்களும் சிவமாகவே சிந்திக்கப்படும்.

*"நின்னிற் சிறந்த நின்தா ளிணையவை*
*நின்னிற் சிறந்த நிறைகடவுளவை"*

**(பரிபாடல் : பா 4அடி 62, 68)**

என்பது பரிபாடலெனுஞ் சங்கநூற் செய்தி. நின்னைப் போன்று சிறந்தவை நின் தாளிணைகள். நின்னைப் போன்று பரிபூரணத்துவமான கடவுளை என்று அந்நூல் தெரிவிக்கின்றது. திருவருட் சக்தி ஆகிய திருவடி கழல் எனும் அணியை உடையது. கழல் வீரக்கழல் என்றும் அமையும். கழல் என்றாலே ஆகுபெயராகத் திருவடியை உணர்த்தவல்லது. அது மலவாற்றல் தவிர்க்கும் வெற்றிப்பாடு குறித்தது. கழல் என்று பண்டிதமணி சு.அருளம்பலவனார் தாமெழுதிய திருவாசக ஆராய்ச்சியுரை என்னும் நூலிற் குறிப்பிட்டுள்ளார். கழல் வெற்றி குறித்து அணியப்படுவதொரு காலணி. அங்கே இறைவனிடமாகும்போது மலவாற்றலைத் தவிர்க்கும் வீரம் கருதப்பட்டதாகலாம். "மறுபிறப்பறுக்கும் மாசில் சேவடி" (பரிபாடல் பா.3 அடி 2) என்று பரிபாடல் என்னும் சங்க நூல் கூறும் செய்தியை இங்கு நினையலாம்.

திருவங்கமாலை அப்பர் சுவாமிகள் பாடியதொரு தேவாரத் திருப்பதிகம். அங்கே "தலையே நீ வணங்காய்" "கண்காள் காண் மின்களோ" "செவிகாள் கேண்மின்களோ" "மூக்கே நீ முரலாய்" "வாயே வாழ்த்து கண்டாய்" நெஞ்சே நீ நினையாய்" "கைகாள் கூப்பித் தொழீர்" என்று இந்த அவயவங்களுக்குப் பணிப்பு வழங்கிய சுவாமிகள் "ஆக்கையாற் பயனென்" என்றும் "கால்களாற் பயனென்" என்றும் வினாவை வருவித்துப் பதில் காண்கிறார்கள். "கறை கண்டன் உறை கோயில் கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக் கால்களாற் பயனென்" என்கிறார்கள். ஆக்கை அவயவங்கள் பொருந்தியுள்ள முழு வடிவு. எனவே அவயவங்களின் வழிபடு பணி ஆக்கைக்கும் உண்டு என்பதாற் சிறப்பான பணிப்பு அங்கே தேவையற்றது என்பது புலப்படும். கால்கள் தனியொரு உறுப்பே எனினும் ஏனைப் பகுதிகளைத் தாங்கி அவற்றைக் கொண்டுசெல்லும் பணி கால்களுக்கு உண்டல்லவா! அல்லாமலும் அவற்றின் பணி செவ்வனம் நடைபெற உதவுவது கால்களின் உயர்ந்த பணி என்பது மற்றொன்று. அதாவது சுற்றி வருவது மூலம் மற்றை அவயவங்கள் ஒழுங்காக வழிபட உதவுவது.

***திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்***
***திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்***
***திருவடி ஞானம் சிறைமலர் மீட்கும்***
***திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே***

**(திருமந்திரம் 1598)**

என்பது திருமந்திரம் தரும் உண்மை.

# தமிழும் சமயமும்

முனைவர். இரா.இராஜேஸ்வரன்

சமயம் என்பது மானிட சமுதாயத்தை நல்வழியில் வாழ வழிகாட்டும் தன்மை உடையதாகும். உலமெல்லாம் ஒரே சமயம் என்ற நிலை இல்லாமல் இந்து சமயம், கிறிஸ்தவ சமயம், இஸ்லாம் சமயம், பௌத்த சமயம், சமண சமயம் என்று பலவாறாக உள்ளன. எல்லா சமயத்திற்கும் அடிப்படையானது இறை நம்பிக்கை. "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்" என்ற திருமூலரின் கருத்தின் மூலம் 'அன்பே சிவம்' (Love is God) என்கிற தாரக மந்திரமே சைவ சமயத்தின் ஆணிவேர். இந்தச் சமயக் கொள்கைகள் கோட்பாடுகள் சிந்தனைகள் போன்றவற்றை பரப்பும் மனிதனிடம் செல்லவும் மொழி என்கிற கருவி தேவைப்படுகிறது.

ஒரு மொழியை வளப்படுத்தும் திறமை, ஆற்றல் மனிதனுக்கு மட்டுமே உண்டு. மொழி வளம் பெறும் போது சிந்தனையும் அறிவும் வளம் பெறும். பின்னர் அது வலுப்படும். பல்வேறு மொழிகள் இருப்பினும் தமிழ்மொழி எந்த வகையில் சைவ சமயத்திற்கு தொண்டாற்றியுள்ளது என்பதை மட்டுமே ஆய்வதே கட்டுரையாளரின் நோக்கமாகும்.

**சைவ சமயத்தின் தொன்மை**

சமயம் ஒரு தத்துவம்; ஒரு மதக்கோட்பாடு; ஒரு வாழ்வியல் நெறி. சமயம் பற்றிக் காந்தியடிகள் குறிப்பிடுகையில் "சமயம் இல்லாமல் மனிதன் உயிர் வாழ முடியாது" என உறுதியுடன் மொழிகின்றார். அந்தளவுக்குச் சமயம் மானுட வாழ்வில் முக்கிய பங்கு வகிக்கின்றது. சமயங்கள் இறை நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டவையாகும். சமயங்களிடையே சடங்குகள், வழிபாட்டு முறை போன்றவைகள் மாறுபட்டாலும் அடிப்படையில் சமயக் கொள்கை ஒன்றே எனக் கருதலாம். உலகில் இன்று கிறிஸ்தவம், இஸ்லாம் சமயங்களுக்கு அடுத்ததாக இந்து சமயம் (சனாதன தர்மம்) உலகம் முழுவதும் பரவியுள்ளது.

சைவம், வைணவம் என இரு பிரிவுகளைக் கொண்ட இந்து சமயம் உலகில் தோன்றிய பழமையான சமயம் ஆகும். அதில் குறிப்பாக சைவ சமயம் தொன்மை வாய்ந்தது எனக் கூறலாம். சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு போன்ற நூல்களில் சிவனைப் பற்றிய செய்திகள் பல உள்ளன. புறநானூற்றில்,

*பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி*
*நீலமணி மிடற்று ஒருவன்*

எனச் சிவபெருமானைப் பற்றி ஔவையார் கூறியுள்ளார். தமிழ் இலக்கியங்களில் சிறந்த காப்பியமான சிலப்பதிகாரத்தில் "பிறவா யாக்கை பெரியோன் கோயிலும்" என சிவபெருமானைப் பிறவா யாக்கைப் பெரியோனாக இளங்கோவடிகள் கூறியுள்ளார்.

சைவ சமயம் சிவனோடு தொடர்புடையது. இச்சமயமே உலகில் தோன்றிய முதற்சமயம் ஆகும்.

***சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை***
***அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை***
***புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னும்***
***தவளச் சடைமுடித் தாமரை யானே***

என்ற திருமந்திரத்தின்படி சைவத்தின் முழுமுதற்கடவுள் சிவபெருமான் ஆவார்.

“சைவசமயமே சமயம்” என்று தொடங்கும் தாயுமானவரின் தமிழ்ப்பாடல் சைவ சமயத்தின் மாண்பை உலகெங்கும் பறைசாற்றுவதாக அமைகிறது. “சைவத்தின்மேற் சமயம் வேறில்லை அதில் சார்சிவமாம் தெய்வத்தின் மேல் தெய்வம் வேறில்லை” என்று சைவ எல்லப்ப நாவலர் குறிப்பிட்டுள்ளது சிந்திக்கத்தக்கது.

சிந்துவெளி நாகரிக காலத்தின்போதே சிவலிங்க வழிபாடு இருந்தமையை நிரூபிக்க சிந்துவெளி அகழ்வாராய்ச்சியின்போது கிடைத்த பொருட்களில் சிவலிங்கமும் ஒன்றாகும். மொகஞ்சதாரோ அகழ்வாராச்சியின்போது பண்டைய காலத் தமிழ் எழுத்துக்கள் பல கிடைத்துள்ளன.

சிவலிங்க வழிபாடு என்பது நம் பாரத நாட்டில் மட்டுமல்லாமல் எகிப்து, சிரியா, பாரசீகம், ஆபிரிக்கா, திபெத்து, அமெரிக்கா, சுமத்ரா, ஜாவா தீவுகள் போன்ற உலகின் பல பகுதிகளிலும் ஒரு காலகட்டத்தில் பரவியிருந்தது என்பதை மேலைநாட்டு வரலாற்று அறிஞர்கள் எச்.எம்வெஸ்ட்ராப், இ.டி.டெய்லர் ஆகியோர் தங்களின் நூலில் விளக்கியுள்ளனர். அதேபோன்று இலங்கைக்கும், சைவ சமயத்திற்கும் மிக நெடிய வரலாற்றுத் தொடர்பு உண்டு. இராமேசுவரம், திருக்கேதீசுவரம், கோணேசுவரம், முன்னேசுவரம், நகுலேசுவரம் போன்ற சிவாலயங்கள் புராதனப் பெருமையும், சிறப்பும் பெற்றவை. இவற்றில் இராமேசுவரம் தவிர்ந்து மற்ற ஏனைய நான்கும் இலங்கையில் உள்ளன.

தமிழ்க் கடவுளான முருகன் தமிழர் தம் தெய்வம் என்பதற்குக் கீழ்கண்ட சங்கநூல்களே சான்றாகும்.

***“மணிமயில் உயரின மாறா வென்றிப்***
***பிணிமுக வூர்தி ஒண்செய் யோனும்” (புறநானூறு)***
***“முருகு ஒத்தியே முன்னியது முடிந்தலின்” (புறநானூறு)***
***“முருகன் அன்ன சீற்றத்து...” (அகநானூறு)***
***“முருகற் சீற்றத்து உருகெழு குரிசில்” (பெருநாராற்றுப்படை)***

முருகப் பெருமானும் தமிழும் வேறில்லை. முருகனே தமிழ்; தமிழே முருகன்.

சங்க காலத்திலேயே தமிழகத்தில் இந்து சமயம், சமண சமயம், பௌத்த சமயம் போன்ற மூன்று சமயங்கள் தோன்றின. இந்த காலகட்டம் சைவ சமயத்திற்கு ஓர் இருண்ட காலம் என்றே கூறலாம். காரணம் சமண சமயத்தையே களப்பிரர்கள் ஆதரித்து வந்தனர். அதன் பின்னர், சமய குரவர்களின் வருகையால், சைவப்பயிர் செழுமையாக வளர்ந்தது. பல்லவர்கள், பாண்டியர்கள், சோழர்கள் போன்ற மன்னர்கள் சைவ நெறியைச் சிறப்பாக வளர்த்தனர்.

ஏழாம் நூற்றாண்டில் சைவ நெறிக்கு மறுமலர்ச்சி ஏற்பட்டது என கூறலாம். காரணம் இந்தக் காலத்தில்தான் இறைவனின் தூதர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற நால்வர்கள் தோன்றிக் காலத்திற்கும் அழியாத அரிய செயல்களை செய்தனர். இவர்களால் சைவமும் வளர்ந்தது. தமிழும் வளர்ந்தது. பின்னர் தென்னிந்தியாவில் (கேரளா) தோன்றிய ஆதிசங்கரரால் சைவ சமயம் தழைத்தோங்கியது. இந்து மத வழிபாட்டைக் காணபத்தியம் (கணபதி வழிபாடு), கௌமாரம் (முருகன் வழிபாடு), சாக்தம் (சக்தி வழிபாடு), சௌரம் (சூரியன் வழிபாடு), வைணவம் (திருமால் வழிபாடு), சைவம் (சிவன் வழிபாடு) என ஆறு வகையாகப் பிரித்து இறையின்பம் பெற வழிகாட்டினார். "ஆறுவகைச் சமயத்தில் அருந்தவரும்...' என்கிற பெரிய புராணம் மற்றும் "அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வலர் பொருளாய்" என்கிற சிவஞான சித்தியார் பாடல் மூலம் நாம் அறியலாம். ஆதிசங்கரர் தமது வேதாந்தக் கொள்கையான அத்வைதத்தைப் போதித்து, அதைத் தொடர்ந்து நிலைநாட்டவும், இந்தியாவில் சிருங்கேரி, பூரி, பத்ரி, துவாரகை போன்ற புண்ணிய தலங்களில் திருமடங்களை நிறுவினார்.

பின்னர் சைவ சமயம் சற்று நிலைகுன்றிய நிலையில் இருந்தபோது அருளாளர்கள் தோன்றி ஆதீனங்கள் (சைவத்திருமடம்) மூலம் சமயத்தை காத்தனர். புராணங்கள் பதினெட்டு, சித்தர்கள் பதினெண்மர் போன்று சைவ ஆதீனங்கள் பதினெட்டு ஆகும். இவற்றைச் 'சுத்த சைவ பதினெண் ஆதீனங்கள்' என்றும் கூறுவர். இவற்றில் முதலில் தோன்றியது திருவாவடுதுறை ஆதீனம். அடுத்துத் தோன்றியது தருமபுர ஆதீனம் ஆகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் மீண்டும் இந்து மதத்திற்கு சுவாமி விவேகானந்தர் மூலம் இளம் இரத்தம் செலுத்தப்பட்டது எனக் கூறலாம்.

சைவ சித்தாந்த தத்துவத்தை விளக்கும் திருமந்திரம் பதி, பசு, பாசம் என்னும் மூன்றை வலியுறுத்துகிறது.

> *"பதிபசு எனப் பகர் மூன்றில்*
> *பதியினைப் போல்பசு பாசம் அனாதி*
> ***பதியினைச் சென்று அணுகாப் பசுபாசம்***
> ***பதி அணுகில் பசுபாசம் நிலாவே"***

ஆன்மாவைப் பசுவாகவும் இறைவனைப் (சிவன்) பதியாவும் அவனை அடைவதற்குப் பாசத்தை விடுவதும் இந்தத் தத்துவ விளக்கம், தமிழ் நாட்டில் சைவ சமயம் அறுபத்து மூன்று நாயன்மார்களின் திருத் தொண்டினால் புத்துயிர் பெற்று நன்கு வளர்ந்தது.

**தமிழ் மொழியின் பங்களிப்பு:**

தகவல் பரிமாற்றத்திற்கு மொழி அவசியம். மனிதன் தோன்றிய காலம் முதல் மொழி எனும் கருவி நடைமுறையில் இருந்தது. மனித உறவுக்கு ஒரு பாலமாக அமைவது மொழி ஆகும். ஒரு சமுதாயத்தின் கலை, கலாசாரம், பண்பாடு, வரலாறு, இலக்கியம் போன்ற அனைத்தும் மொழியைச் சார்ந்தே அமைகிறது. உயிருக்கும், இறைவனுக்கும் உள்ள தொடர்பை அறிவதற்கு மொழி அவசியம் தேவைப் படுகின்றது.

சைவ சமயத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தது தமிழ்மொழியும் சமஸ்கிருதமும் ஆகும். தமிழ் அறிஞர் டாக்டர் வா.செ.குழந்தைசாமி இதுபற்றிக் கூறுகையில் தமிழும் சமஸ்கிருதமும் இந்திய பண்பாட்டின் இரு தூண்கள் எனத் தனது ஆழ்ந்த அனுபவத்தின் முதிர்ச்சியால் தெரிவிக்கிறார். தமிழும் வடமொழியும் கி.மு5000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனத் தமிழாராய்ச்சி அறிஞர் க.வெள்ளைவாரணனார் தெரிவிக்கிறார்.

*"மன்னுமா மலை மகேந்திர மதனிற்*
*சொன்ன வாகமந் தோற்று வித்தருளியும்"*

எனும் திருவாசக வரிகள் மூலம் தமிழ்மொழியின் இலக்கணத்தைச் சிவபெருமான் முதன்முதலில் அகத்திய மாமுனிக்கு உபதேசித்தார் என்பதை அறியலாம்.

மேலைநாட்டு மொழிகளான கிரேக்கம், இலத்தீன், சீன மொழிகளுக்கு நிகரான பழமையும் சிறப்பும் தமிழ்மொழிக்கு மட்டுமே உண்டு. "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி..." என்கிற சிறப்பு தமிழ்மொழிக்கே உண்டு. சைவ சமயம் தழைக்க அரும்பாடுபட்ட சமய அருளாளர்களான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருமூலர், சேக்கிழார், அருணகிரிநாதர், குமரகுருபரர், இராமலிங்க அடிகளார் மற்றும் பல சிவனடியார்களின் வழிவழியாக வந்து இறைவன் மீது தெய்வத் தமிழால் பாடியருளினார்கள்.

சுந்தரர் "இறைவன் தமிழை ஒத்தவன்" என்றும், நாவுக்கரசர் "பண்ணின் இன்மொழி கேட்கும் பரமன்" என்றும், "தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்" என்றும், சேக்கிழார் "ஞாலமளந்த மேன்மைத் தெய்வத்தமிழ்" என்றும் இறைவனைத் தமிழாகவே போற்றியுள்ளார்கள்.

தமிழில் சைவ சமயத்தின் தோத்திரப் பாடல்களை அருளிச் செய்தவர்கள் திருஞான சம்பந்தர் முதல் சேக்கிழார் வரை உள்ள சமயகுரவர்கள் ஆவர். அவை பன்னிரண்டு திருமுறைகளாக வகுக்கப்பெற்று தொகுக்கப் பெற்றன. இவற்றை 'பன்னிரு திருமுறை' என அழைப்பார். இவை முதலாம் இராசராசன் காலத்தில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பி என்பவரால் தொகுக்கப்பெற்றன.

*"தோடுடைய செவியன் விடையேறியோர்தூ வெண்மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசி என்னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மான் இவனன்றே"*

என்று தொடங்கும் முதலாம் திருமுறை (1469 பாடல்கள்) இரண்டாம் திருமுறை (1331 பாடல்கள்), மூன்றாம் திருமுறை (1358 பாடல்கள்), யாவும் திருஞான சம்பந்தர் அருளிய தேவாரப் பாடல்கள் ஆகும். நான்காம் திருமுறை (1070 பாடல்கள்), ஐந்தாம் திருமுறை (1015 பாடல்கள்),மற்றும் ஆறாம் திருமுறை (981 பாடல்கள்) அனைத்தும் திருநாவுக்கரசர் அருளிய தேவாரப் பாடல்கள் ஆகும்.

*"பித்தா பிறைசூடி பெருமானே யருளாளா..."*

என்று தொடங்கும் ஏழாம் திருமுறை (1025 பாடல்கள்) சுந்தரர் அருளிய தேவாரப் பாடல்கள் ஆகும். எட்டாம் திருமுறை மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம், திருகோவையார் ஆகும். திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஒன்பதாம் திருமுறை, பத்தாம் திருமுறை திருமூலரின் திருமந்திரம், பதினோராந் திருமுறை திருவாலவாயுடையார், காரைக்காலம்மையார் போன்றோர் முதல் நம்பியாண்டார் நம்பி வரை பன்னிருவர் பாடிய திருப்பாடல்கள். பன்னிரண்டாம் திருமுறை சேக்கிழார் பெருமான் அருளிய திருத்தொண்டர் புராணம் பன்னிரு திருமுறைகளில் சுமார் 18 ஆயிரம் பாடல்கள் உள்ளன. அவை இறைவனை அடையச் செய்யும் தோத்திரப் பாடல்கள் ஆகும்.

திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞான சித்தியார், இருபா இருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை வெண்பா, கொடிக்கவி, நெஞ்சு விடு தூது,உண்மை நெறி விளக்கம், மற்றும் சங்கற்ப நிராகரணம் என்னும் பதினான்கு சாத்திர நூல்கள் சைவ இறை நெறியை உணர்த்தும் நூல்கள் ஆகும்.

தமிழைப் போற்றி, தமிழ் வழியே சைவ சமயத்தைப் பரப்பச் செய்த தவச் சான்றோர்களால் செந்தமிழும் வளர்ந்து, சிவநெறியும் வளர்ந்தது.

**முடிவுரை**

இவ்வாறு உயர்தனிச் செம்மொழியாகிய தமிழும், சைவமும் சிறப்புடன் பொலிவுபெற சைவச் சான்றோர்கள் பலர் பாடுபட்டுள்ளனர். தமிழர்கள் சைவத்தையும் தமிழையும் இரு விழிகளாய்ப் போற்றிக்காத்து வருகிறார்கள். சனாதன தர்மம் என்னும் இந்து மதத்தின் உயிர்நாடியாகச் சைவசமயம் விளங்குவது போலச் சைவசமயத்தின் உயிர்நாடியாகச் செந்தமிழ் விளங்குகின்றது. கிறிஸ்தவர்களுக்கு பைபிள் புனித நூல் (Holy book) போல, இஸ்லாமியர்களுக்குத் திருக்குர் ஆன் புனிதநூல் போல, சைவர்களுக்குச் சமயகுரவர் அருளிய தேவாரம் புனித நூல் என்றே கூறலாம்.

**கடவுளிடம் கேட்கவேண்டியதைக் கேளுங்கள்.ஆனால், அவர் கொடுப்பதைப் பெற்றுக்கொள்ளத் தயாராக இருங்கள்.**

# இறவாத இன்ப அன்பு

முனைவர். மு.வள்ளியம்மை

சமயநெறி பரப்பும் சமயவாதிகள், சமய அருளாளர்கள் அன்பு வாழ்க்கை மூலம் இறையன்பை பரப்பினர். சைவசமயம் செழிக்க அரும்பணி ஆற்றிய காரைக்காலம்மையாரே சமய நெறி பரப்பும் பணியில் முன்னோடியாக நிற்கிறார். சிறு பிள்ளைப் பருவம் முதல் இரவும் பகலும் எப்போதும் நெஞ்சிலே, நினைவிலே, உயிரிலே இறைவனை எண்ணி எண்ணி வாழ்ந்தவர். இவர் பாடிய அற்புதத் திருவந்தாதியின் முதற் பாடலில்,

> *"பிறந்த மொழி பயின்ற பின்னெல்லாங் காதல்*
> *சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்"*

என்ற முதல் இரண்டடிகள் இவர் இறைவன் மீது கொண்ட அன்பையும், சமயம் சார்ந்த உணர்வையும், சமயக் கொள்கையில் வழுவாமல் இருந்த தன்மையையும் உணர்த்துகின்றன.

அம்மையார் சிவ வழிபாட்டில் அக வழிபாடு, புற வழிபாடு என்ற முறையையும் அறிமுகப்படுத்தியவர். அதன் தொடர்பாகப் பின் வந்த அடியார்கள் வாழ்வில் சிவத்தொண்டும், சிவ வழிபாடும், சிவானுபவமும் மட்டுமேயல்லாது சிவ வழிபாட்டில் அதிதீவிர முறையும் காணப்படுகிறது.

அம்மையார் தோற்றுவித்த சிவன்பால் கொண்ட பக்தியும் உறுதிப்பாடும் அம்மையாரின் மனத் திண்மையும் அவர் காலத்துக்குப் பின்னால் வந்த அடியார்கள் வாழ்விலும் வெளிப்படுகின்றது. அம்மையார் காட்டிய நெறி பிற்காலத்தில் அடியார்க்கு வாழ்வில் அன்பு நெறியாக மலர்கிறது. அன்பு நெறியில் திளைத்த அடியார்கள் தங்கள் வாழ்வில் கொண்ட பற்று, பாசம், இல்லறம் இவற்றைத் துறந்தனர் என்பதைப் பெரிய புராணம் விளக்கும்.

அடியார்களை வழிபடல், பேணல் ஆகியனவும் இறைவனை வழிபடலுக்குச் சமமானது என்பதைக் காரைக்கால் அம்மையார் உணர்த்தினார். சிவனை மட்டுமல்லாது சிவநேயச் செல்வர்களையும் வழிபட்டனர். அப்பூதியடிகள் அப்பரையும் கணநாதர் சம்பந்தரையும், பெருமிழலைக் குறும்பர் நம்பியாண்டார் நம்பிகளையும் இன்னும் ஐயடிகள் காடவர்கோன் குலச் சிறையார், ஏயர்கோன் கலிக்காமர் ஆகியோர் அடியவர்களையும் வழிபட்டு உய்தி பெற்ற சிவத்தொண்டர்கள். இவர்களெல்லாம் இறைவனால் ஆட்கொள்ளப் பெற்ற அருளாளர்கள். ஆனால் காரைக்கால் அம்மையாரே திருவடியின் கீழ் இருக்கும் பேறு பெற்றவர். இறைவன் ஓர் பெண்ணை அம்மையாக ஏற்றுக் கொண்டார். ஓர் ஆணை அப்பனாக ஏற்றுக் கொண்டார். அம்மை காரைக்கால் அம்மையார் அப்பன் கண்ணப்பன். அம்மையைத் தூக்கிய திருவடியின் கீழ் வைத்தார். அப்பனைத் தன்

வலப்பக்கத்தில் வைத்தார். இருவரையுமே தன் பக்கத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதால் இடது புறத்தை உமையம்மைக்கும் வலது புறத்தை இவர்கள் இருவருக்கும் கொடுத்தார். இப்படிப்பட்ட பேறு அம்மைக்கு எப்படிக் கிடைத்தது? அவர் கேட்டுப் பெற்ற வரத்தால் கிடைத்தது. வரத்திற்குப் பொருளாய் அமைந்தது ஓர் கனி. கனியை வைத்தே அம்மையின் வாழ்வில் தன்பணியைத் தொடங்குகிறார் இறைவன்.

காரைக்கால் அம்மையார் ஈசனிடத்தும் அடியவரிடத்தும் செலுத்திய அன்பு ஒரு தாய் தன் குழந்தையிடம் காட்டும் அன்பாக அமைந்தது. அதனால் ஈசன் அவரைத் தாயாகக் கொண்டான். பானினைந்தூட்டும் தாயாய். கறியமுது இல்லையே என ஏங்கி. கணவன் கொடுத்தனுப்பிய கனிகளில் ஒன்றைச் சிவனடியார்க்கு இட்டு மகிழ்ந்த பண்பே இறைவன் இவரைத் தாயாக ஏற்றுக் கொள்ளச் செய்தது. இறைவனிடம் காட்டிய தாயன்பை இவரது திருப்பாட்டுக்களில் காணமுடிகிறது. பெருமானிடத்தும் பிராட்டியிடத்தும் அம்மையார் தாயாந் தன்மை நிலையில் தலையன்பு கொண்டு பேணினார்.

***"பாம்புகளை அணியாதீர்", "பொன்னாரம் மற்றொன்று பூண்"***
***"இரந்துண்ண வேண்டாம்", இடுகாட்டில் ஆடும் போது பிராட்டியைக்***
***கூட வைக்க வேண்டாம்", பிராட்டி பேய்களுக்கு அஞ்சுவாள்"***

என்றிவ்வாறு உலகியல் தாயின் பரிவோடு பாடும் பாட்டுக்கள் இத்தன்மையை விளக்குகின்றன. இத்தன்மையால் இவள் நம்மைப் பேணும் அம்மை காண் என்று திருவுள்ளம் மலர்கிறார் இறைவன். அம்மையே! என்றழைத்து என்ன வரம் வேண்டும்? என்று கேட்கிறார் எம்பெருமான். அம்மை கேட்ட வரம் நம்மைச் சிந்திக்க வைக்கிறது. அவரது மன உணர்வுகளோடு ஒன்றிய எழுச்சியின் வெளிப் பாடாக அவ்வரங்கள் அமைகின்றன.

***"இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகிறார்***
***பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்***
***மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி***
***அறவா நீ ஆடும்போது அடியின் கீழ் இருக்க என்றார்."***

என்று பாடுவார் சேக்கிழார் பெருமான்.

ஒரு உயிர் மற்றொரு உயிரால் நேசிக்கப்பட வேண்டுமென்று விரும்புவது இயற்கை. அந்த அன்பும் நிலைத்து நிற்க வேண்டும் என்று எண்ணுவதும் இயல்பே. இந்த அன்பே அம்மையின் வார்த்தைகளில் தொனிக்கிறது. உலக உயிர்கள் அனைத்தும் இன்பத்தையே விரும்புவன. இறவாத இன்ப அன்பு என்று இயம்புங்கால் அன்பு வேண்டும்; அது மாறாமல் இருந்தால் மட்டும் போதாது; இன்பமானதாகவும் இருத்தல் வேண்டும் என்பதுதான் அவருடைய முதல்வரம். கணவனின் அன்பு தன் கடைசிக் காலம் வரை இருக்கும் என்று நம்பிக் கைப்பிடித்த அம்மையார் அது இல்லை என்றானதும் இறைவனின் அன்பை இறவாத அன்பாக வேண்டுகிறார்.

இந்த உலகில் உண்மை அன்பு உணரப்படாமலும் போற்றிப் பேணுவாரற்றும் போய் விடுகிறது. ஒருதலைப் பட்சமான போலியான அன்பு உணர்ச்சியே எங்கும் பரவலாக உணரப்படுகிறது. இதுபோல் உதட்டளவில் அன்பு செலுத்துகின்ற, செலுத்திய உண்மை அன்பைப் புரிந்து கொள்ளாத இந்த முரண்பாடான மானிடர் சமுதாயத்தில் இனி தாம் பிறக்கவே கூடாது என்று எண்ணுகிறார். இவ் வரத்தினையே மீண்டும் பிறவாமை வேண்டும் என இரண்டாவதாக வைக்கிறார். இவ்வுலகின் மீது கொண்ட வெறுப்பின் உச்ச நிலையாக மூன்றாவது வரம் அமைகிறது. மாறாகப் பிறந்துவிட்டால் உன்னைவிட்டுப் பிரித்து விடாதே. உன் அருகிலேயே என்னை வைத்துக் கொள் என்று வேண்டுகிறார். கணவன் தன்னை வேண்டாம் என விட்டபின் படர்க்கையில் ஒருமையாகிப் போனான். ஒன்றிய உணர்வின் மிக்க நிலையில் உடனே இறைவனோடு ஒன்றிப் போனார். இவர் கேட்கும் வரங்களில் தற்சிந்தனையே மேலோங்கி நிற்கிறது. அச்சிந்தனையோடு அடுக்கடுக்காகக் கேட்கும் வரத்தின் மூலம் அவரது ஆழமான மனவடுவே வெளிப்படுகிறது.

இப்படிப்பட்ட வரங்களை அம்மையார் கேட்டவுடன் இறைவன் அதைக் கூடும்படி அருள் செய்கின்றார். இதைச் சேக்கிழார்

***கூடுமாறு அருள் கொடுத்துக் குலவுதென்திசையில் என்றும்***
***நீடுவாழ் பழன மூதூர் நிலவிய ஆலங்காட்டில்***
***ஆடுமா நடமும் நீகண்டு ஆனந்தம் சேர்ந்து எப்போதும்***
***பாடுவாய் நம்மை என்றான் பரவுவார் பற்றாய் நின்றான்***

**(கா.பு.61)**

என்று பாடுவார். பாடுவாய் நம்மை - எப்பொழுது? எப்போதும் பாடுவாய். எப்படிப் பாடுவாய்? மகிழ்ந்து பாட வேண்டும் என்று கேட்டாயல்லவா? - ஆனந்தம் சேர்ந்து பாடுவாய். இப்படி இறவாத இன்ப அன்பு வேண்டிப் பெற்ற அன்னை திருவாலங்காடு என்னும் தலத்தினைத் தலையாலே நடந்து வந்தடைந்தார். ஆலங்காட்டு ஆலயத்தினுள் சென்று அங்கு அண்டமுற நிமிர்ந்தாடும் ஆண்டவனைக் கண்டு "கொங்கைதிரங்கி நரம்பெழுந்து..." என்று தொடங்கும் மூத்த திருப்பதிகம் பாடினார். இறைவன் திருநடனத்தைக் கண்டு வணங்கிய பேரன்பு மேன்மேலும் பொங்கி எழ எட்டி இலவமீகை..." எனத் தொடங்கி "முழவம் கொட்டக் குழகன் ஆடும்" என்ற முடிப்பினையுடைய திருப்பதிகம் பாடி அருளினார்.

சித்தாந்த நெறிப்படி ஆன்மா இறைவனைச் சேர, சில படி நிலைகளைக் கடக்க வேண்டும். பாச நீக்கம், சத்திநிபாதம், மலபரிபாகம், வீடு பேறு என்பன கிட்ட வேண்டும். பசுவானது பாசத்தைவிட்டுப் பதியைச் சென்றடைய இவை எல்லாம் நிகழ வேண்டும். காரைக்காலம்மையார் இந்த நெறியில் இறைவனைச் சென்றடைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பாசத்திற்குக் காரணமாகிய உடம்பை நீத்தது பாச நீக்கம். "தலையால் நடந்து வரும் அந்த எற்புடம்பின் அன்புதான் என்னே!" என்ற அம்மையின் திருக்கண் நோக்கின் அருள் சத்திநிபாதம். இறைவன் அம்மையே என ஏற்றுக் கொண்ட திறம்

மலபரிபாகம். பிறவாமை வேண்ஊஉ எனக் கேட்டுக் கூடுமாறு அருள் கொடுத்தது வீடுபேறு. ஆடும் போது உன் அடியின் கீழிருக்க எனக் கேட்டுப் பெற்றது சாமீபம்.

*"தலையாய வைந்தினையுஞ் சாதித்துத் தாழ்ந்து*
*தலையா யினவுணர்ந்தோர் காண்பர் - தலையாய*
*வண்டத்தா னாதிரையா னாலால முண்டிருண்ட*
*கண்டத்தான் செம்பொற் கழல்"*


**(திருவிரட்டை மணிமாலை 10)**

சாதனமாகிய சிவஞானத்தையும் சாதிக்கும் முறையினையும் சாதித்தற்கண் வரும் இடையூறுகளை நீக்கும் வழிகளையும் குருவருளால் அறிந்தோர் ஏனை அண்டங்கள் அனைத்திற்கும் தலையாய் விளங்கும் சிவயோக வாழ்வு தரும் சிவ புவனம் காண்பர் என்பது இப்பாடலின் மையக் கருத்து. கழல் காண்டல் என்பது வீடு பேறெய்தல். இப்பாடல் அம்மையாரின் சிவானுபவ வெளிப்பாடு. தாம் பெற்ற இன்பத்தைப் பிறரும்பெற வேண்டும் என்ற நல்ல நோக்கில் வழிமுறைகளைக் காட்டக் கூடியதாக இவர் பாடல்கள் அமைந்திருப்பது தனிச் சிறப்பு.

எந்த அடியாருக்கும் கிடைக்காத பேறு பெற்றவர் காரைக்காலம்மையார். "எப்போதும் பாடிக்கொண்டிரு" என்ற திருவாக்கும் எந்த அடியாருக்கும் கிடைக்காதது. தாயன்பு காட்டிய அம்மையார் எப்போதும் இறையடியில் இருக்கும் இறவாத இன்ப அன்பினைப் பெற்றார். திண்ணிய நெஞ்சமும் தெளிந்த அறிவும் கொண்ட காரைக்காலம்மையாரின் மன உறுதியை அவர்தம் பாடல்களில் அகச்சான்றாகக் காண முடிகிறது.

*"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்*
*திண்ணியர் ஆகப் பெறின்"*

என்ற வள்ளுவத்திற்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்து சிறந்தவர் காரைக்காலம்மையார்.



**ஸ்ரீ துர்க்காதேவி**
**தேவஸ்தானத்தில் இடம்பெற்ற**
**மானப்பூ**
**உற்சவ நிகழ்ச்சி**

# நேர்வழி காட்டி அருள்வாயம்மா!

கவிஞர் குகன், தெல்லிப்பழை

வாணி கலைவாணி வாணியம்மா
வந்து கலைநலம் தருவாயம்மா
தேனின் சுவையென இனிக்கும்கவி
பாடவே இன்னருள் புரிவாயம்மா

அறிவொளி அமுதம்தந் தருள்வாயம்மா
ஆக்கும் கவிக்கெழல் படைப்பாயம்மா
நெறியி லுயர்ந்திடச் செய்வாயம்மா
நேர்வழி காட்டி அருள்வாயம்மா

பாட்டினில் மேன்மை படைத்திடவே
பைந்தமிழ்ச் செல்வம்தந் தருள்வாயம்மா
கூட்டும் அருளொளி அமுதந்தந்தே
குவலயத் துயர்ந்திடச் செய்வாயம்மா

நாடு நலம்பெற நற்கவிதை
பாடி மகிழ்ந்திடச் செய்யுமம்மா
கூடும் அறிவொளி கண்டுவகை
பூத்திட உன்னருள் காட்டுமம்மா

தேவி கலைவாணி வாணியம்மா
தேசுறு கலைநலம் காட்டுமம்மா
கவினுறு கவிகள் பலபாடி
உன்கழல் பணிந்திட அருளுமம்மா

தேசுறு சபையினில் ஏறிடினே
தேன்மழை போற்கவி சொரிந்திடவே
பூசுரர் போற்றிடும் பூமகளே
புராத னியேநீ அருளுமம்மா

வீரம் மிகுநெஞ்சம் தந்தருளும்
வீரி திருசூலி துர்க்கையம்மா
கரமலர் கூப்பியே உன்னடிகள்
பணிந்தேன் அருள்துர்க்கா தேவியம்மா

செந்தமிழ் மாலைகள் பாடிடவும்
தேசுடன் என்றென்றும் வாழ்ந்திடவும்
சுந்தர வாழ்வு துலங்கிடவும்
அருள்வாய் மூகாம் பிகையம்மா!

(கடந்த இதழ் தொடர்ச்சி)

# திருக்கோயில்களில் தமிழர் கலைகள்

செ.இந்திரா, விரிவுரையாளர், வடலூர்

## தொல்காப்பியத்தில் சிற்பக்கலை

சிற்பத்திற்கு படிமை அல்லது பிரதிமை என்னும் பெயர்களும் உள்ளது. உருவங்களைக் கல்லிலோ, மண்ணிலோ, மரத்திலோ படிய வைப்பது படிமை. தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே தமிழகத்தில் சிற்பத்தைப் படிமை எனக் குறித்தனர். படிமை என்ற சொல்லினைத் தொல்காப்பியத்தில் காண்கிறோம். "தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றிப் பல்புகழ் நிறுத்த படிமையோனே" எனத் தொல்காப்பியத்தின் பாயிரத்தில் பணம்பாரனார் பாடுகின்றார். தொல்காப்பியர் தொல்காப்பியத்தைச் செய்ததன் வாயிலாகக் கல்லில் செதுக்கிய படிமையைப் போலத் தன் பெயரை நிலைநிறுத்திக் கொண்டார் என பணம்பாரனார் குறிப்பிடுகின்றதன் வாயிலாகப் பண்டைய தமிழகத்தில் சிற்பக்கலை இருந்ததனை உணரலாம்.

## சங்க நூல்களில் சிற்பக்கலை

இறந்த வீரர்களுக்கு கோயில் எடுக்கப்பட்டதைப் போலவே கணவன் பொருட்டு உயிர் துறந்த பெண்களுக்கும் கோயில்கள் எடுக்கப்பட்டன. மதுரையை எரித்த கண்ணகிக்கு கனகவிசயர் தலையில் சுமந்து கொண்டு வரப்பட்ட கல்லைக் கொண்டு இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் கோவில் எடுத்த செய்தியையும், கோயில்கள் கட்டும் பொழுதும் சிற்பங்கள் அமைக்கும் பொழுதும் சிற்ப நூலறிந்த சிற்பிகள் நாள் குறித்து, நாழிகை பார்த்து, கயிறிட்டு அளந்து நான்கு திசைகளிலும் தெய்வங்களை வணங்கிக் கோயில் கட்டினர் என்பதை , "ஒரு திறம் சாரா வரைநாள் அமையத்து நூலறி புலவர் நுண்ணிதின் கயிறிட்டுத் தேஎம் கொண்டு தெய்வம் நோக்கிப் பெரும் பெயர் மன்னர்க்கு ஒப்பமனை வகுத்து" என நெடுநல்வாடை நவில்கின்றது.

## காப்பிய நூல்களில் சிற்பக்கலை

சிலப்பதிகாரத்தில் சிற்பக்கலையின் சிறப்பு பல இடங்களில் பேசப்படுகிறது. சிற்பக்கலையில் சிறந்தவன், தேவலோகங்களில் நுண்ணிய வேலைப்பாடுகள் செய்வதில் கை தேர்ந்தவன் மயன். சிலப்பதிகாரத்தில் மயன் பற்றிய குறிப்புக்கள் காணக்கிடைக்கின்றன. "மயன் விதித்தன்ன மணிக்கால் அமளிமிசை" என்றும், "மயன் விதித்துக் கொடுத்த மரபின் இவைதாம்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. மணிமேகலையில் சிற்பங்கள் வெவ்வேறு பொருட்களைக் கொண்டு

உருவாக்கப்பட்டன என்பதனை அறிய, "மண்ணிலும் கல்லிலும் மரத்திலும் சுவரிலும் கண்ணிய தெய்வம் காட்டுநர் வகுக்க" என சங்க நூல்களில் சிற்பம் பற்றி செய்திகள் அதிகம் வந்திருப்பதன் மூலம் சிற்பக்கலையின் பெருமைகளை அறிகிறோம். இவற்றை அல்லாமலும் இராமாயணத்தில், பல்லவர் கால சிற்பங்களான மாமல்லபுர சிற்பங்கள் இன்றும் உலக அளவில் பெருமை உடையதாக இருக்கின்றன.

## பிற்காலச் சோழர்காலச் சிற்பக்கலை

தஞ்சைப் பெரிய கோவிலைத் தோற்றுவித்த இராசஇராசசோழன் காலம் முதல் சிற்பக்கலை அமைப்பில் பெருத்ததொரு மாறுபாடு காணப்படுகிறது. இராசராசன் கருங்கல்லால் வானளாவிய கோவிலைக் கட்டினான். இராசராசன் கோபுரங்களையும் விமானங்களையும், சிற்பங்களால் நிரப்பினான். இராசேந்திரச் சோழனும் கட்டிடச் சிறப்பிற்கு முதலிடம் அளித்தான் என்றாலும் கங்கை கொண்ட சோழபுரத்தில் உள்ள சிற்பங்களில் கலைமகளின் சிற்பமும், சண்டீசுவரரின் சிற்பமும் குறிப்பிடும்படியாய் உள்ளன. தாராசுரத்தில் இரண்டாம் இராசராசன் தோற்றுவித்த கோவிலில் சிற்பங்கள் காணப்படினும் கட்டடக்கலை சிறப்பே மேலோங்கியுள்ளது.

## முடிவுரை

இவ்வாறு தமிழர் வளர்ந்த இசைக்கலை, ஆடற் கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, கட்டடக்கலை போன்றவைகளைத் திருக்கோவில்களில் வளர்த்த தமிழர் கலைகள் என்ற தலைப்பின் கீழ் ஆராயப்பட்டுள்ளது.

**(நன்றி : திருக்கோவில்களின் திருவிழாக்களும், தமிழர் கலைகளும்)**

### திருவாசகம்

*பொய்யனேன் அகம் நெகப் புகுந்து, அமுது ஊறும்,*
*புலமலர்க் கழல் இணை அடி பிரிந்தும்,*
*கையனேன், இன்னும் செத்திலேன் அந்தோ!*
*விழித்திருந்து உள்ளக் கருத்தினை இழந்தேன்,*
*ஐயனே! அரசே! அருள் பெரும் கடலே!*
*அத்தனே! அயன், மாற்கு, அறி ஒண்ணாச்*
*செய்ய மேனியனே! செய்வகை அறியேன்*
*திருப்பெருந்துறை மேவிய சிவனே.* **(செத்திலாப்பத்து)**

*தேன் பழச் சோலை பயிலும் சிறுகுயிலே! இது கேள் நீ,*
*வான் பழித்து, இம்மண் புகுந்து, மனிதரை ஆட்கொண்டவள்ளல்*
*ஊன் பழித்து, உள்ளம் புகுந்து, என் உணர்வு அது ஆய ஒருத்தன்*
*மான் பழித்து ஆண்ட மென் நோக்கி மணாளனை நீ வரக் கூவாய்!* **(குயில்பத்து)**

# தீபாவளி - ஒருசில தகவல்கள்

தீமை அகன்று நன்மை பிறக்கும் நன்னாள்தான் தீபாவளி என்கின்றனர் முன்னோர்கள். ஒளி என்பது வெற்றியின் அடையாளம். இருள் என்பது தோல்வியின் பொருள்.

அசுரர்களை, கடவுளின் அவதாரம் அழித்ததால் உருவானதுதான் தீபாவளி பண்டிகை என்கின்றன இந்துப் புராணங்கள். பூமாதேவிக்குப் பிறந்தவன்தான் நரகாசுரன். அசுரவதத்தின் போது பிறந்தவன் என்பதால் அசுர சுபாவம் இவனுக்கு இயல்பாக அமைந்துவிட்டது. நரன் என்றால் மனிதன். மனிதனாக இருந்தாலும், துர்க்குணங்கள் நிரம்பியவனாக இருந்ததால் நரக அசுரன் எனப்பட்டான். அப்பெயரே நரகாசுரன் என்றானது.

நரகாசுரன், தேவர்களுக்கும் மக்களுக்கும் பல்வேறு துன்பங்களை கொடுத்து வந்தான். இதனால் கோபம் அடைந்த கிருஷ்ண பகவான் நரகாசுரனை கொல்ல முடிவு எடுத்தார். ஆனால் அவன் பெற்ற வரத்தின் படி, அவன் தாயை தவிர வேறு யாராலும் கொல்லப்படமுடியாது. எனவே கிருஷ்ண பகவான் சத்தியபாமாவுடன் இணைந்து நரகாசுரனுடன் போரிட்டார்.

சத்யபாமா பூமியின் அவதாரம் என்று உணராமல் அவரோடு நரகாசுரன் போர் செய்து அவர் அம்புக்கு இலக்காகி இறக்கும் தருவாயில்தான், சத்யபாமா தனது தாய் என்பதை தெரிந்து கொண்டான்.

இந்த நேரத்தில் தனது தாயிடம் நரகாசுரன் ஒரு வேண்டுகோளை வைத்தான். "நான் மறையும் இந்நாள் மக்கள் மனதில் நிற்க வேண்டும். என்னுடைய பிடியிலிருந்து விடுபட்ட தேவர்களும் மக்களும் இந்த நாளை இனிப்பு வழங்கி, ஒளிமயமாக கொண்டாட வேண்டும்" என்றான்.

அவனது கோரிக்கையை ஏற்ற கிருஷ்ண பகவானும் சத்யபாமாவும் அவனுக்கு வரம் கொடுத்தார்கள். நரகாசுரன் மறைந்த நாளே மகிழ்ச்சி பொங்கிய தீபாவளி பண்டிகை நாளாக கொண்டாடப்படுகிறது.

இந்த தீபாவளிக்கு மற்றொரு கதையும் உண்டு. அதாவது வால்மீகி இராமாயணத்தில் இராமன், இராவணனை கொன்று மனைவி சீதை மற்றும் சகோதரன் லட்சுமணன் உடனும் வனவாசம் முடித்து அயோத்திக்கு திரும்பிய நாளை மக்கள் விளக்கேற்றி வரவேற்றனர். இந்நாளே தீபாவளி என்று சொல்லப்படுகின்றது.

ஜோதி வடிவான இறைவனை வழிபடுவதற்கான சிறப்பு நாளே தீபாவளியாகும். மேலும் ஆணில் பெண் சரிபாதியாக இணையும் நன்நாளினை நினைவுபடுத்துவதாக தீபாவளி அமைந்ததாகக் கூறுகிறது ஸ்கந்தபுராணம்.

இந்நிலையில், இந்த புராணக்கதைகளை விட வேறு சில விளக்கங்களும் சொல்லப்படுகின்றன. அதாவது கி.பி ஆயிரத்து நூறாம் ஆண்டிலேயே தீபாவளி கொண்டாடும் பழக்கம் இந்தியாவில் இருந்துள்ளதாக தெரிகின்றது.

கி.பி 1117இல் வாழ்ந்த சாளுக்கிய திரும்புவன மன்னன் ஆண்டுதோறும் சாத்யாயர் எனும் அறிஞருக்கு தீபாவளிப் பரிசு வழங்கியதாக கன்னடத்தில் எழுதப்பட்ட கல்வெட்டு ஒன்று கூறியுள்ளது. எண்ணெய் தேய்த்து நீராடுவதைப் பற்றிய குறிப்புக்கள் கி.பி 1250இல் எழுதப்பட்ட லீலாவதி எனும் மராத்தி நூலில் இடம் பெற்றுள்ளன.

தீபாவளி குறித்து, கரிசல் இலக்கிய எழுத்தாளர் கி.ராஜநாராயணன் கருத்தில், பொதுவாக ஐப்பசி மாதம் பனி நிறைந்த மாதம். இல்லம் தோறும் குளிர் அதிகமாக அண்டும் காலம். இருள் கூடும் காலம் என்றும் இதைக் கூறலாம். அந்தக் காலகட்டத்தில் ஒளியை பெருக்கி உஷ்ணத்தை வீடுகளில் உருவாக்க இந்தப் பண்டிகையை மக்கள் கடைப்பிடிக்க தொடங்கி இருக்கலாம் என்று கூறியுள்ளார்.

**(இணையம்)**

---

# கந்தசஷ்டி விரதச் சிறப்பு

கந்தப் பெருமான் சூரனைச் சங்கரித்த பெருமையைக் கொண்டாடுவதே கந்த சஷ்டி விரத விழாவாகும். முருகன் எழுந்தருளியிருக்கும் சகல ஆலயங்களிலும் கந்தசஷ்டி விரதம் மிகச் சிறப்பாக ஆறுநாட்கள் அனுஷ்டிக்கப்படுகின்றது. ஐப்பசி மாதத்தில் வரும் வளர்பிறை சஷ்டி அன்றுதான் முருகப் பெருமான் சூரபத்மனை அழித்தநாள்.

முழுமுதற் கடவுளாக கலியுகக்கந்தப் பெருமான் போற்றப்படுகின்றார். மனித மனம் விரதத்தின்போது தனித்து, விழித்து, பசித்து இருந்து ஆறுவகை அசுத்தங்களையும் அகற்றித் தூய்மையை அடைகின்றது. தூய உள்ளம், களங்கமற்ற அன்பு, கனிவான உறவு என்பவற்றிற்கு அத்திவாரமாக கந்தசஷ்டி விரதம் அமைகிறது.

கொடுங்கோலாட்சி செலுத்திய ஆணவத்தின் வடிவமாகிய சூரனையும், அரசு சக்திகளையெல்லாம் கலியுக வரதனான பெருமான் அழித்து, நீங்காத சக்தியை நிலை நாட்டிய உன்னத நாளே கந்த சஷ்டியாகும்.

ஐப்பசித் திங்கள் வளர்பிறை பிரதமை முதல் சஷ்டி வரையிலான ஆறு நாட்களும் கந்தப் பெருமானை நினைத்து வழிபட்டு விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது. இந்நாளில் உபவாசம் இருப்பது அதி உத்தமம் எனக் கருதப்படுகிறது. பழம் மட்டும் சாப்பிட்டு, இளநீர் குடித்து ஒரு நேர உணவு மட்டும் உண்டு அவரவர் தேக நிலைக்கேற்ப கந்தசஷ்டி விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

ஆறாவது நாளான கந்தசஷ்டியன்று பூரண உபவாசம் இருத்தல் வேண்டும். விரதம் ஆரம்பமான தினத்தில் ஆலயம் சென்று சங்கர்ப்பம் செய்து காப்புக் கட்டி விரதத்தைத் தொடங்குவார்கள். முருகனுடைய விரதங்களுள் கந்த சஷ்டி விரதம், கார்த்திகை விரதம், வெள்ளிக்கிழமை விரதம் ஆகிய மூன்றும் பிரதானமானவையாகும். கந்தசஷ்டி விரதம் தொடர்ந்து ஆறு வருடங்களும், கார்த்திகை விரதம் பன்னிரண்டு வருடங்களும், வெள்ளிக்கிழமை விரதம் மூன்று வருடங்களும் அனுஷ்டிக்கப்படுவது அவசியமாகும்.

ஏனைய விரத அனுட்டானங்களைப் போலன்றி கந்தசஷ்டி விரதனுஷ்டானத்தை பெருமளவு ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும் கடைப்பிடிக்கின்றார்கள். மாணவர்கள் படிப்பிற்கும், குடும்பப் பெண்கள் குடும்ப நன்மைக்கும், கன்னிப் பெண்கள் நல்ல கணவனை வாழ்க்கைத் துணையாக அடைய வேண்டியும், குழந்தை இல்லாதோர் குழந்தை வேண்டியும் இவ்விரதத்தை அனுஷ்டிக்கின்றனர்.

சூரன், சிங்கன், தாரகன் முதலிய அசுரர்கள் நெடுங்காலமாக தேவர், மனிதர் யாவரையும் துன்புறுத்தி அழித்து வந்தனர். பரமசிவன் இதற்கொரு முடிவு காணும் நோக்கில், தனது சக்தியையே முருகப் பெருமானாகப் பிறப்பித்தார். அந்த முருகப் பெருமான் இந்தச் சூரபதுமாதி அசுரர்களுடன் ஆறுநாட்கள் போரிட்டு வென்றார். இந்த அருட் பெருங்கருணைச் செயலை வியந்து இப்போர் நிகழ்ந்த காலமாகிய ஐப்பசி மாத வளர்பிறை முதல் ஆறு நாட்களையும் விரத நாட்களாகக் கொண்டு முனிவரும் தேவரும் நோற்றுவந்தனர். இதுவே கந்தசஷ்டி என்ற பேரில் பூலோக மாந்தரும் அனுஷ்டிக்கக் கிடைத்தது.

கந்த புராணக் கதையைச் சங்கரன் பிள்ளை சட்டியிலே மாவறுத்தார் என்ற சொற்றொடர் மூலம் நகைச்சுவையாக சொல்வது வழக்கம். சங்கரன் புதல்வராகிய முருகப் பெருமான் சஷ்டித் திதியிலே மாமரமாக வந்த சூரனை ஆட்கொண்டார் என்பது இதன் பொருள். வெறும் கதை சொல்லும் புராணமாகக் கந்தபுராணத்தை எண்ண முடியாது. சைவ சித்தாந்த பேருண்மைகளை உருவகப்படுத்திக் கதை வடிவில் சுவைபடத் தரும் அருமையான நூல் இதுவாகும்.

கந்தசஷ்டி விரதத்தின்போது தினமும் கந்த சஷ்டி கவசம், கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, திருப்புகழ், கச்சியப்ப சுவாமிகளின் கந்த புராணம் ஆகியவற்றைப் பாராயணம் செய்வதால், சாந்தி, மனஅமைதி நிலவும். இதனை ஒவ்வொருவரும் உணர்ந்திருப்பர். கந்தசஷ்டி விரத ஆறு நாட்களும் கந்தப் பெருமான் எழுந்தருளியுள்ள ஆலயங்களில் எல்லாம் பூரண கும்பம் வைத்து விசேட அபிஷேகமும், சண்முகார்ச்சனையும், கந்தபுராண படனப் படிப்பும் நடைபெறும். விரதம் முடிவுற்ற அன்று முருகன் ஆலயத்தில் சூரன்போர் நடைபெற்று, மறுநாள் விரதம் அனுஷ்டித்த அனைவரும் பாறணை பண்ணி விரத பூசையைப் நிறைவு செய்கின்றனர்.

**(இணையம்)**

சிறுவர் விருந்து

# தாயாரைப் போற்றும் தாமோதரர்

சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம்

தாமோதரர் என்னும் பெரிய இரத்தின வியாபாரி ஒருவர் இருந்தார். அவர் வைத்திருந்த இரத்தினங்களெல்லாம் விலையுயர்ந்தவை. அப்படியான இரத்தினங்களைப் பெரிய செல்வர்கள் மாத்திரம் வாங்கத் தக்கவர்கள். அவருக்கு நெடுநாளாக இரத்தினங்கள் விலைப்படவில்லை. அதனாலே அவருக்கு முட்டுப்பாடு வந்தது.

அந்த ஊரிலுள்ள இராசாவுக்குப் பட்டாபிஷேகம் நடக்க வேண்டியிருந்தது. அன்றைக்கு அவர் அணிந்து கொள்வதற்கு ஒரு பதக்கஞ் செய்யப்பட்டு வந்தது. அதற்கு நடுவில் வைத்தற்கு இரத்தினங்கள் வேண்டியிருந்தன. இரத்தினங்களை வாங்குவதற்காக இராசா தம்முடைய உத்தியோகத்தர் சிலரை அனுப்பினார். அவர்கள் தாமோதரரிடம் போனார்கள். தாமோதரர் தம்முடைய கடையிலிருந்த இரத்தினங்களையெல்லாம் அவர்களுக்குக் காட்டினார்.

அவர்கள் அவற்றிலும் பார்க்க ஒளியுள்ள இரத்தினங்கள் வேண்டுமென்று சொன்னார்கள். அவர் அவர்களை அங்கே இருக்கும்படி சொல்லிவிட்டுத் தம்முடைய விலையுயர்ந்த இரத்தினங்களை எடுத்தற்கு வீட்டுக்குள்ளே போனார். போய்ச் சொற்ப நேரத்தில் திரும்பி வந்தார். இரத்தினங்களைக் கொண்டு வரவில்லை. இரத்தினங்கள் எங்கேயென்று அவர்கள் கேட்டார்கள். அவர், "நான் என்ன செய்வேன்? இப்போது அவைகளை எடுத்துக் கொள்ள முடியவில்லை" என்றார்.

அரசனுடைய உத்தியோகத்தர்கள் "எங்களுக்கு இரத்தினம் அவசியம் தேவையாயிருக்கிறது. என்ன விலை சொன்னாலும் நாங்கள் தருவோம். பணத்தை பெரிதாக நினைக்க மாட்டோம்" என்று சொன்னார்கள். அதற்குத் தாமோதரர் "இன்னும் இரண்டு மணி நேரத்தில் நீங்கள் வந்தால் ஒருபோது நான் அவைகளை உங்களுக்கு எடுத்துத் தரக்கூடும். இப்போது எடுத்துத் தர இயலாது" என்றார். அவர்கள் தங்களுக்கு இரத்தினங்கள் உடனே வேண்டுமென்றும், தாங்கள் தாமதிக்க முடியாதென்றும் சொல்லிவிட்டுப் போனார்கள்.

தாமோதரருடைய மனைவி இவையெல்லாவற்றையுங் கேட்டுக்கொண்டு இருந்தாள். இரத்தினம் வாங்க வந்தவர்கள் போன பின்பு, அவள் அவரிடம் போய், "இப்படியும் நீங்கள் செய்யலாமா? எவ்வளவு விலை சொன்னாலும் தருவோமென்று அவர்கள் சொன்னார்களே. அந்த இரத்தினங்களை எடுத்து அவர்களுக்கு விற்றிருந்தால், எங்களுடைய வறுமை தீர்ந்து போமே" என்று வருத்தப்பட்டுச் சொன்னாள். அதற்குத் தாமோதரர், "நீ சொல்வது சரிதான். ஆயினும் நான் வீட்டைத்

திறந்தபொழுது வீட்டுக்குள்ளே என்னுடைய தாயார் படுத்து நித்திரையாய்க் கிடந்தார். நான் சத்தம் பண்ணாமல் உள்ளே போவதற்குக் கதவை மெதுவாய்த் திறந்தேன் : கதவு கிறீச்சிட்டது. அவர் நித்திரையிலே திடுக்கிட்டுப்போனார். கதவை இன்னுந் திறந்து உள்ளே போய்ப் பெட்டியைத் திறந்தால், அவர் விழித்து விடுவார். அப்போது நான் யோசித்ததாவது, அவருடைய நித்திரையைக் கெடுத்து இரத்தினங்களை எடுத்துக் கொண்டு போனால், எனக்குப் பணம் அதிகங் கிடைக்குந்தான். ஆயினும் இந்தப் பணம் பெரிதா? என் தாயாரின் நித்திரை பெரிதா? என்னுடைய உயிரைக் கொடுத்தும் எனது தாயாரைச் சுகமாக வைத்திருப்பது என்னுடைய கடன். ஆதலால் அவருடைய நித்திரையை நான் கெடுக்கலாகாது எனச் சிந்தித்து மீண்டேன் என்று சொன்னார்.


---


## இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் யாழ்ப்பாணத்தில் நடாத்திய அறநெறி விழா - 13.08.2019







# அமரர் சைவத்திரு.கா.சிவபாலன் அவர்களின் நினைவுகள்









இந்த சஞ்சிகை கோண்டாவில் சிவபூமி தொழிற்பயிற்சிப் பாடசாலையில் அச்சிடப்பட்டு துர்க்காதேவி தேவஸ்தானத்தால் வெளியிடப்பட்டது. (புரட்டாதி - ஐப்பசி - 2019)